# காலச்சுவடு பதிப்பகம் | 2022 புதிய வெளியீடுகள் 100

## உ | ல | க | கி | ளா | சி | க் | நா | வ | ல்



### சின்னஞ்சிறு இளவரசன்

**ஆந்த்துவான் த சேந்தெக்ஸுபெரி**

தமிழில்: **எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி**

ரூ. 195

புதிய மொழியாக்கம், முழுவதும் வண்ணப் பக்கங்கள்

ஆந்த்துவான் த சேந்தெக்ஸுபெரி எழுதிய ‘Le Petit Prince’ என்னும் பிரெஞ்சு நாவல் உலகின் சாதனைப் படைப்புகளில் ஒன்று. இந்த நாவல் குழந்தையின் களங்கமற்ற பார்வையின் வழியே உலகைக் காண்கிறது. இந்தப் பார்வையில் வெளிப்படும் தரிசனங்கள் பெரியவர்களுக்கான திறப்புகளாக இருக்கின்றன. பிரெஞ்சு மொழி அறிஞரும் பல்வேறு படைப்புகளைப் பிரெஞ்சிலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து பிரெஞ்சுக்கும் மொழியாக்கம் செய்துள்ள எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தியின் இந்த மொழியாக்கம் கடந்த 40 ஆண்டுகளில் தமிழ்மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டதாக அமைந்துள்ளது.

## மொ | ழி | பெ | ய | ர் | ப் | பு | நா | வ | ல்



### தந்தைக்கோர் இடம்


(பிரஞ்சு நாவல்)

(2022 நோபல் பரிசு)

**அன்னி எர்னோ**

தமிழில்: **எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி**

பிரான்சின் வட மேற்கு மாகாணமான நார்மண்டியில், விவசாயப் பண்ணைகளில் வேலைசெய்பவர்களின் குடும்பங்கள் வறுமையின் பிடியில் வாடிக்கொண்டிருந்தன. அப்படிப்பட்ட குடும்பம் ஒன்றில் பிறந்த அன்னி எர்னோவின் தந்தை சமூகத்தில் சற்று ‘மேலான’ இடத்தைப் பிடிப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்கிறார். அவர் சந்தித்த இன்னல்கள் ஏராளம். இருந்தும், அவரால் பெரிதாக வெற்றிபெற முடியவில்லை. தந்தையால் நிகழ்த்த இயலாத சாதனையை நிகழ்த்திக்காட்ட மகள் உறுதிபூணுகிறாள். அவளுடைய முயற்சி என்ன ஆனது என்பதை இந்தக் கதை எடுத்துக் காட்டுகிறது. நோபல் பரிசு பெற்ற ஒருவரின் நூல் அதே ஆண்டில் தமிழில் வெளியாகும் முதல் சந்தர்ப்பம் இது.




### வாழும் மாமலை

நம் காலத்து அ நீதிக் கதை

**அமிதவ் கோஷ்**

தமிழில்: **கண்ணன்**

ஞானபீட விருது பெற்ற, உலக அங்கீகாரம் பெற்ற அமிதாவ் கோஷின் புதிய புனைவு ‘வாழும் மாமலை’. சுற்றுச்சூழல், பாரம்பரிய அறிவு, நம்பிக்கைகள், விவேகம் ஆகிவற்றில் அவருக்குள்ள அவரது ஆழ்ந்த புலமை, அக்கறை ஆகியவற்றின் வெளிப்பாடு இப்படைப்பு. இயற்கையுடன் மேற்கொள்ள வேண்டிய உறவைப் பற்றிய அறிதல் குறைபாட்டினாலும் பேராசையினாலும் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றம், அதன் விளைவாக ஏற்பட்டுவரும் பேரழிவுகள் ஆகியவற்றின் பின்னணியில் நம் காலத்தை மறுபரிசீலனை செய்யத் தூண்டும் படைப்பு.



### ஆத்ம சகோதரன்

(பிரஞ்சு நாவல்)


(2021 இன்டர்நேஷனல் புக்கர் பரிசு)

**டேவிட் டியோப்**

தமிழில்: **எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி**

ரூ. 150

கிராமத்து முதியவர் ஒருவர் வாழ்க்கையின் இரகசியங்களைப் பற்றி எங்களுக்கு தீட்சையளித்தார். எங்களுக்குச் சொன்ன மிகப்பெரிய இரகசியம் என்னவென்றால், நிகழ்வுகள்தான் மனிதர்களைக் கட்டுப்படுத்துகின்றன, மனிதன் நிகழ்வுகளைக் கட்டுப் படுத்துவதில்லை என்பதாகும். ஒரு மனிதனுக்கு வரும் திடீர் சோதனை அதற்கு முன் அவன்போன்ற மற்றவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும். மனிதனின் சாத்தியக்கூறுகள் எல்லாம் ஏற்கெனவே அனுபவிக்கப்பட்டவை. நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும், நமக்கு ஏற்படுவதெல்லாம் ஒன்றும் புதிதல்ல. இருப்பினும், நாம் அனுபவிப்பது நமக்குப் புதிதாகத் தோன்றும், ஏனென்றால், மனிதன் ஒவ்வொருவனும் தனிப்பட்டவன் ஒவ்வொரு இலையும், ஒவ்வொரு மரமும் தனிப்பட்டதாக இருப்பதைப் போல!



### பாவங்களும் அப்பாவிகளும்

(துருக்கி நாவல்)

**புர்ஹான் ஸென்மெஸ்**

ஆங்கிலத்தில்: ஊமிட் ஹுசைன்

தமிழில்: முடவன்குட்டி முகம்மது அலி

ரூ. 295

ஒரு குர்திய அகதியும் ஒரு பாரசீக இளம்பெண்ணும் தற்செயலாக கேம்ப்ரிட்ஜில் சந்தித்துக்கொள்கின்றனர். இந்த இருவரின் கதையை இந்த நாவல் கூறுகிறது. கவிதையில் நம்பிக்கை கொண்ட அவள் எப்போதும் ஒரு புத்தகத்தைத் தன்னுடன் கொண்டுசெல்கிறாள்; தூக்கமின்மையால் துன்புறும் அவனோ, புதைகுழிகளில் வேதனையான அனுபவங்களை எதிர்கொண்டு போராடுகிறான். அவர்கள் வாழ்கிற கேம்ப்ரிட்ஜ் நகரில் ஒன்றும், எப்போதோ வெளியேறி வந்துவிட்ட தாய்மண்ணில் மற்றதுமாய் இரு தளங்களில் அவர்கள் வாழ்க்கை நகர்கிறது.



### சகீனாவின் முத்தம்

(கன்னட நாவல்)


**விவேக் ஷான்பாக்**

தமிழில்: கே. நல்லதம்பி

முடிச்சுக்கள் நிறைந்த சிக்கலான மாறுபட்ட ரகசிய மனம் கொண்ட முகங்கள் இந்த நாவலில் பேசுகின்றன. வாழ்க்கையின் பல தரிசனங்களை நிரூபித்துக்கொண்டே எளிமையான விவரங்களுடன் சிக்கலான கதையொன்று தோன்றியுள்ளது.

பல நினைவுகளிலிருந்து பொறுக்கி எடுத்த நிகழ்வுகளைச் சொல்லிக்கொண்டே கதை நாயகனின் “தனிமொழிச் சுகத்தின்” வழியாகவே விரிந்துகொண்டே போகும் புனைவு சிறப்பான பாணியில் வாசிப்பு அனுபவத்தைத் தருகிறது.

## இஸ்தான்புல்: நிலவறைக் கைதிகளின் நினைவுக் குறிப்புகள்





**புர்ஸான் ஸென்மெஸ்**

தமிழில்: **முடவன் குட்டி முகம்மது அலி**

ரூ. 300

சித்திரவதை மையத்தின் நிலவறைச் சிறைகளிலிலுள்ள நான்கு கைதிகளின் கதை இது. சித்திரவதைக்கு உட்படுத்தப்படாத சமயங்களில் இஸ்தான்புல் பற்றிய கதைகளை அவர்கள் தங்களிடையே சொல்லிக்கொள்கிறார்கள். கதை, நிலவறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் மேலே நிலப்பரப்பிற்குத் திரும்புகிறது. மனிதர்களை மையமாகக் கொண்டு நகரும் நாவல் பின்னர் இஸ்தான்புல் நகரின் மீது கவனம் கொள்கிறது. துன்பமோ நம்பிக்கையோ இஸ்தான்புல்லில் இருக்கும் அளவு நிலவறைச் சிறைகளிலும் உள்ளன.

## சொல்லக் கூடாத உறவுகள்




**சூசன் ஹாதோர்ன்**

தமிழில்: **சசிகலா பாபு**

ரூ. 325

ஆஸ்திரேலிய நாவலாசிரியர் சூசன் ஹார்தோர்னின் 'Dark Matters'இன் மொழிபெயர்ப்பு இந்நாவல். தன்பாலின ஈர்ப்பாளர்கள், குறிப்பாக லெஸ்பியன்கள் தங்களின் பாலியல் அடையாளத்தைத் தக்கவைத்துக்கொள்ளுவதற்கான பெரும்போராட்டத்தை இது கேத் என்ற கதாபாத்திரத்தினூடாகச் சொல்கிறது. கேத்தும் மெர்சிடிசும் தன்பாலின இணையர்கள். ஓர் அதிகாலைப் பொழுதில் அவர்களின் படுக்கையறையை உடைத்துக்கொண்டு நுழையும் ஒரு கும்பல், மெர்சிடிஸைச் சுடுகிறது; அவர்களின் வளர்ப்பு நாய் பிரியாவைச் சுட்டுக் கொல்கிறது; கேத்தைக் கண்களைக் கட்டி யாரும் அறிந்திராத இடத்துக்குக் கொண்டுசெல்கிறது. அதன் பிறகு கேத்துக்கு என்ன நடக்கிறது? மெர்சிடிஸ் என்ன ஆனார்?

## அமாவும் பட்டுப்புறாக்களும்




**ஜோசலின் கல்லிட்டி**


தமிழில்: **சசிகலா பாபு**

ரூ. 425

**1856.** அவத் ராஜ்ஜியத்தின் தலைநகரமான லக்னோ கிழக்கிந்திய கம்பெனியின் பேராசைக் கரங்களுக்கு இலக்காகிறது; நவாப் கல்கத்தாவில் கம்பெனியின் உயரதிகாரிகளைச் சந்திக்கக் கோரிக்கை மனுவோடு முகாமிட்டிருக்கிறார்; அவரின் தாயாரோ லண்டனில் விக்டோரியா மகாராணியின் தரிசனத்துக்காகக் காத்திருக்கிறார்; இந்தச் சூழலில் நவாப்பின் இரண்டாம் மனைவியான, அரச குடும்பத்தில் பிறக்காத, அரசி என்ற அந்தஸ்து அளிக்கப்படாமல் காமக் கிழத்திகளில் ஒருத்தியாகவே வாழ்ந்துகொண்டிருக்கும் பேகம் அஸ்ரத் மகல் கம்பெனிப் படையின் அத்துமீறல்களை எதிர்கொண்டு தனது இளம்வயது மகனுக்கு முடிசூட்டி மக்கள் மனதில் நம்பிக்கையை ஊட்டி லக்னோவை மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்குகிறார். அவரது முயற்சி வென்றதா? லக்னோ காப்பாற்றப்பட்டதா? இந்தக் காலகட்டச் சம்பவங்களை, நவாப் குடும்பத்தின் நம்பிக்கைக்குக்குரியவளும் அவரது கருவூலத்தின் பாதுகாவலாளியும் தாய் வழியில் ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவளும் போராளியுமான அமா என்ற இளம்பெண்ணின் வாழ்வனுபவங்களாக நாவல் விரிக்கிறது.

**த | மி | ழ் | கி | ளா | சி | க் | நா | வ | ல்**

## அவன் ஆனது




**சா. கந்தசாமி**

ரூ. 275

சா. கந்தசாமியின் நாவல்களில் உளவியலுக்கு முக்கியத்துவம் தரும் நாவல் 'அவன் ஆனது'. எதிரில் உட்கார்ந்திருப்பவரிடம் பேசும் தொனியில், காலத்தில் முன்னும் பின்னுமாய் நகர்ந்துசெல்லும் கதையாடல் இதன் தனித்த அம்சம். 1981இல் வெளிவந்த இந்த நாவல் பொதுவாக அன்றைய நாவல்களில் காணப்படும் தொடக்கம், மையப் பிரச்சினை, முடிவு என்பனபோன்ற சம்பிரதாயமான கட்டமைப்பைத் தவிர்க்கிறது. சொல்லப்படும் கதை ஒரு தளத்தில் முன்னகர, சொல்லப்படாத இன்னொரு கதையும் இணைச்சரடாக ஓடுகிறது. வெளிவந்து நாற்பது ஆண்டுகளுக்குப் பின் வாசிக்கும்போதும் புதிதாகவே இருப்பது இதன் வலிமை.

## கிருஷ்ணப் பருந்து




**ஆ. மாதவன்**

ரூ. 200

'கிருஷ்ணப் பருந்து' நாவலில் இரு பகுதிகள் இருக்கின்றன. இரண்டாவது பகுதிதான் முதற்பகுதிக்கு அர்த்தத்தையும் செறிவையும் நுணுக்கத்தையும் தருகிறது. இயற்கையாகப் பாத்திரங்களை உருவாக்குவதிலும், பிராந்திய பாஷையைப் பளிச்சென்று ஒரு சீறும் வேகமாக உருவாக்குவதிலும், இங்கும் அவர் வெற்றியைக் காணலாம்... இந்த நாவலில் சிந்தனையின் நிழல் சற்று அழுத்தமாகவே விழுந்திருக்கிறது.

நாவலை நாம் படிக்கையில் அதன் மேல் தளம் ஒரு திசையில் நகர்வதைப் பார்க்கும் நாம், அதன் அடித்தளம் அதன் எதிர்த்திசையில் நகர்வதை உணரலாம். ஒரே சமயத்தில் இவ்வித இரண்டு இயக்கங்கள் சலிப்பதைச் செய்து காட்டுவது ஒரு ஆற்றல் என்றே நான் கருதுகிறேன். இங்குதான் கலாபூர்வமான வாழ்க்கைப் பிரதிபலிப்பே அதன் விமர்சனமாக மாறுகிறது.

**நா | வ | ல்**

## நெடுநேரம்




**பெருமாள்முருகன்**

ரூ. 390

காதல் பற்றிய விழுமியங்களை யதார்த்த வாழ்வின் தவிர்க்க முடியாத இயல்புகளின் பின்புலத்தில் வைத்துப் பரிசீலிக்கிறது இந்த நாவல். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே எழும் இயல்பான ஈர்ப்புக்கு நடுவே நுழைய யத்தனிக்கும் பல்வேறு கூறுகளின் பின்னணியில் காதலின் இயல்பையும் அதன் உருமாற்றங்களையும் அதனால் ஏற்படும் வலிகளையும் இந்த நாவல் பேசுகிறது.

இன்றைய தலைமுறை இளைஞனின் கோணத்தில் விரியும் நாவல், நேற்றைய தலைமுறைகளின் பார்வைகளையும் உரிய முறையில் உள்ளடக்கியிருக்கிறது.




## நிழல் நதி

களந்தை பீர்முகம்மது

ரூ. 375

முதல் காதலி அல்லது காதலன் என்பது எழுதித் தீராத கருப்பொருள். நினைவேக்கங்களின் தவிர்க்க முடியாத அதிர்வுகளில் முதல் காதலுக்குத் தனி இடம் உண்டு. எத்தனை முறை பேசினாலும் சலிக்காத உணர்வாய் நினைவுகளில் நீடித்திருக்கும் இந்தச் சலனத்தின் புதியதொரு பரிமாணத்தைக் காட்டுகிறது களந்தை பீர்முகம்மதுவின் நிழல் நதி.




## அடைக்கும் தாழ்

சல்மா

ரூ. 275

பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே இயல்பாகத் தோன்றும் ஈர்ப்பு உயிர்களின் ஆதாரமான உணர்வு. வாழ்வின் அமுதம். சாதியும் மதமும் இந்த அமுதத்தை விஷமாக்கிவருகின்றன. மதங்களுக்கிடையிலான விரோதம் மத எல்லைகளைக் கடந்த காதலையும் தீண்டிக் காதலைக் கருகச் செய்கின்றன. மதம் தாண்டிய காதலை இறைமைக்கு எதிராகக் காணும் பிற்போக்குத்தனமும் அத்தகைய காதலைப் போர் வியூகமாகக் காணும் மதவாதமும் சந்திக்கும் புள்ளியில் வெடித்துச் சிதறுகின்றன இளம் மனங்களின் களங்கமற்ற காதல்கள்.

அன்பைத் தாழிட்டு அடைக்க முடியாது என்கிறார் வள்ளுவர். பேதங்களில் ஊறிய மானுட மனம் சாதி, மத, வர்க்க எல்லைகளைக் கடந்த காதல்களுக்கு அந்தப் பெருமையை வழங்க மறுக்கிறது. சகலமும் அரசியலாக மாறி சந்தி சிரிக்கும் காலகட்டத்தின் காதல்களை அடையாளம் காட்டுகிறது சல்மாவின் நாவல்.

இருண்மையும் வெளிச்சமும் பரவிக் கிடக்கிற நிலையிலிருந்து எழுத்தாகியிருக்கிறது சல்மாவின் மூன்றாவது நாவல்.




## கனவுகளைத் தொடர்ந்து

இந்திரா பார்த்தசாரதி

ரூ. 190

சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்தியாவின் சமூக அரசியல் களங்களில் நிலவிய விழுமியங்கள் சுதந்திரத்திற்குப் பிறகு பெருமளவில் மாறியது குறித்து இந்திய மொழிகளில் பல்வேறு படைப்புகள் வந்திருக்கின்றன. கலைந்துபோன மகோன்னதக் கனவுகள் குறித்த கவலையைத் தன் படைப்புகளில் கையாண்டிருக்கும் இந்திரா பார்த்தசாரதி, சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்திய யதார்த்தத்தை இந்த நாவலின் மையப் பொருளாக ஆக்கியிருக்கிறார்.

நகர்ப்புறம் சார்ந்த படித்த, நடுத்தர மக்களின் வாழ்வை அதன் உளவியல் கூறுகளுடன் சித்தரிப்பதில் வல்லவரான இந்திரா பார்த்தசாரதி, ஓர் இளைஞனின் வாழ்வினூடே இந்தியாவின் மாறிவரும் சமூக அரசியல் சூழலைப் பதிவு செய்கிறார். சரளமான நடையில் சுவையான வாசிப்பனுபவத்தைத் தரக்கூடிய இந்த நாவல் கூர்மையான விமர்சனப் பார்வையை அடியோட்டமாகக் கொண்டது.



## சந்தி

ஸ்ரீதரகணேசன்

ரூ. 350

ஒரு தலித் சிறுவனுக்கு அமையும் வாழ்க்கை முறை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது. பல வகைகளிலும் சவால்கள் நிறைந்த சூழலில் அவன் வாழ்க்கை எப்படி அமைகிறது என்பதைக் காட்டும் நாவல் இது.

வளரும் பருவத்தில் சாதியச் சூழல் சுமத்தும் நெருக்கடிகளை அந்தச் சிறுவன் எதிர்கொள்ளும்போது உருவாகும் அனுபவங்கள் சார்ந்த நுட்பமான சித்தரிப்புகளால் ஆனது இந்த நாவல். எழுபதுகளில் இருந்த வாழ்க்கை முறையை அதன் அசலான நிறத்துடன் தன் எளிய சொற்களால் விவரித்துச் சிறந்த படைப்பனுபவத்தைத் தருகிறார் ஸ்ரீதர கணேசன்.




## அந்தரம்

தொ. பத்தினாதன்

ரூ. 250

அலைவுறுதல். பத்திநாதனின் நாவலை அதன் சாரம் சார்ந்து இந்த ஒற்றைப் புள்ளியில் குவிமையப்படுத்தலாம். இந்த அலைவுறுதல் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கான பொருண்மையான அலைவுறுதலாகவும், அகதிகள் முகாமுக்குள் அன்றாட வாழ்க்கைப் பாட்டிற்கு நடக்கும் பொருள்சார்ந்த அலைவுறுதலாகவும் மாறுபட்ட தோற்றம் கொண்டு நாவலில் விரிகிறது.

இலங்கைத் தமிழ் அகதி முகாம் குறித்த அழுத்தமான சித்திரத்தை இந்நாவல் தருகிறது. அகதியினரின் அன்றாட வாழ்க்கை, அவர்கள் அரசியல், கேளிக்கை, வழிபாட்டுப் பிரச்சினை, உறவின் ஊடாட்டங்கள், பொருளாதார நெருக்கடிகள், நினைவேக்கங்கள், நடமாட்டம் சார்ந்த சிக்கல்கள், சில்லறைத்தனங்கள், அத்துமீறல்கள், இந்திய அதிகாரவர்க்கத்தின் கனிவற்ற போக்கு எனப் பல்வேறு கூறுகளை இந்நாவல் விவரிக்கிறது.





## பண்ணையில் ஒரு மிருகம்

நோயல் நடேசன்

ரூ. 190

தமிழகச் சூழலில் சாதியத்தின் சமூக இயக்கத்தையும் அது கொண்டாடும் சடங்குகள், பழக்கவழக்கங்கள், தீண்டாமை ஆகியவற்றையும் வட்டமிடுகிறது இந்நாவல், எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழ்நாட்டிற்குப் புலம்பெயர நேர்ந்த பின்னணியில் சாதிய அடுக்கில் நிகழும் ஆணவக் கொலைகளின் ஒரு கீற்றை மட்டும் எடுத்துக்கொண்டு அதைத் தன் போக்கில் உரசிப் பார்க்கிறார் கதைசொல்லி. புதிர்கள் மெல்லமெல்ல அவிழும் புலனாய்வைப் போல இந்நாவல் விரிகிறது.

தமிழகப் பண்பாட்டுச் சூழல் பற்றித் தமிழ்நாட்டைச் சாராதாரின் நினைவுகளும் கண்ணோட்டங்களும் நவீன இலக்கியங்களில் அவ்வப்போது பதிவு பெற்றிருக்கின்றன. ஆனால் சாதியத்தையும் ஆணவப் படுகொலையையும் முதன்மைப் பிரச்சினைகளாக்கி அயல் சூழலிலிருந்து உருவான புனைவு எனும் பிரிவில் இது முதலானது என்று சொல்லலாம்.



## கம்பா நதி

**வண்ணநிலவன்**

ரூ. 150

இந்நாவலுக்குள் ஏராளமான மனுஷர்களும் மனுஷிகளும் வந்துகொண்டே இருக்கிறார்கள். நதியின் அலைவீச்சு தன்னுள் மிதக்கும் பலவற்றையும் கரையோரத்தில் ஒதுக்குவதைப்போல இவர்களும் ஒதுக்கப்படுகிறார்கள். ஆனாலும் அவர்கள் நதியில் மிதந்து வந்ததற்கான பலாபலன்களை நம் மனத்துக்குள் நுழைத்துவிடுவதில் இந்த எழுத்து புரியும் மாயம் அற்புதமானது. சாதாரண மனிதர்களின் இருப்பையும் அவர்களின் தேடலையும் ஆசை அபிலாஷைகளையும் ஏக்கங்களையும் தோல்விகளையும் வரலாற்றில் நிறுத்திவிட முடியுமென இந்த நாவல் நம்முன்னே கல்லெழுத்தாகப் பதிய வைக்கிறது. நம் சமூகத்தின் பெண்ணினம் இந்த நவீன யுகத்திலும் எதிர்கொள்கிற காவியச் சோகம் நாவலினூடேவெளிப்பட்டு நம்மை உலுக்குகிறது.




## நான் லலிதா பேசுகிறேன்

**சுரேஷ்குமார இந்திரஜித்**

ரூ. 190

இந்தியச் சமூக அமைப்பில் குழந்தைகளின் வாழ்க்கைப் போக்கை நெடுங்காலமாகப் பாதித்த குழந்தைத் திருமண முறையினால் சிறு பிராயத்திலேயே விதவையான லலிதா என்ற பெண்ணின் வாழ்க்கையை இந்த நாவல் விவரிக்கிறது. தன்னிலைக் கூற்றாக அமைந்த இப்படைப்பு சில முக்கிய வரலாற்றுப் பாத்திரங்களின் ஆளுமைச் சித்திரத்தையும் வரலாற்று நிகழ்வுகளையும் பதிவு செய்கிறது. மருத்துவராக உருவாகும் லலிதாவின் அகவுலகச் சிக்கல்களையும் பழமையான மனங்களை நோக்கிய விமர்சனங்களையும் இந்த நாவலில் சுரேஷ்குமார இந்திரஜித் சித்தரித்துள்ளார்.

### முதல் சிறுகதை வரிசை



## தக்கையின் மீது நான்கு கண்கள்

**சா. கந்தசாமி**


ரூ. 140

கதைகளின் காலக் கடிகாரம் வேறு;
வாழ்வின் காலக் கடிகாரம் வேறு.

வாழ்வை அது கடந்துபோன பின்பு ஒரு கதையாக நினைத்துப் பார்த்துக் கொள்ள முடியும். ஆனால் அவ்வாறு நினைத்துக் கொள்ளப்படும்போதே வாழ்வு வேறொரு காலத்துக்குள் புகுந்துவிடுகிறது. அதன் வேகமும் சுழிப்புகளும் செயற்கைத் தன்மையை அடைந்து விடுகின்றன. எவ்வளவு நன்றாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அது பாடம்செய்யப்பட்ட பறவையைத் தொட்டுணரும் உணர்வைக் கொஞ்சமாவது தரத் தவறுவதில்லை. சா. கந்தசாமியின் இந்தக் கதைகள் இந்த மரமரப்பைத் தங்களது நிதானமான மொழிநடையால் அனாயசமாகத் தாண்டிவிடுகின்றன. இந்தக் கதைகள் செயற்கை உச்சங்களை நோக்கித் தலைதெறிக்க ஓடுவதில்லை. தேவைக்கதிகமாக ஓரிடத்தில் கயம்போல் சுழல்வதில்லை. கதைகளின் காலமே அதன் பாத்திரங்கள் நடத்தும் வாழ்க்கையின் காலமாகவும் வாசிப்பவரை உணரவைப்பது இந்தக் கதைகளின் வெற்றி. இது தமிழ் இலக்கியத்தில் அபூர்வமான ஒன்று.

**போகன் சங்கர்**

### கிளாசிக் சிறுகதைகள்



## புஞ்சைலெ ஒரு நடிகெ இருந்தா

**ந. முத்துசாமி**

ரூ. 240

தஞ்சை மண்டலத்துக் குடியானவர்களின் வாழ்க்கை எனும் வரைபடத்தின் வழியே நுண்ணிய மானுடச் சித்திரங்கள் அவற்றின் அசல்தன்மையோடு இந்தக் கதைகளில் பதிவாகியிருக்கின்றன. நனவிலி மனத்தின் கடிவாளங்களை மீறும் நினைவோட்டங்களை மையமாகக் கொண்ட இச்சித்திரங்கள், சிறுகதை நெறிகளை அசட்டையாகக் கையாண்டிருக்கும் அதே வேளையில் செய்நேர்த்தியில் அதீத ஒழுங்கைக் கொண்டிருப்பவை. ந.முத்துசாமியின் கதைகள் வழுக்கிக்கொண்டு போகும் மிக இலகுவான நடையில், எவ்விதச் சிடுக்கும் இல்லாத விவரணைகளைக் கொண்டிருக்கும் எளிய வடிவங்களாக விளங்குகின்றன. உள்ளடுக்குகளுக்குள் ஊடுருவிச் சென்று வாசிப்போரை அவரவரின் ஊன்றலைப் பொறுத்து வெவ்வேறு தளங்களில் இறக்கிவிட்டுப் போகும் திக்குத் தெரியாத கண்கட்டு ஆட்டமாகவும் மறுமுகம் கொண்டிருக்கின்றன.

### மொழிபெயர்ப்பு சிறுகதைகள்



## மோகனசாமி

(கன்னடச் சிறுகதைகள்)

**வசுதேந்த்ர**

தமிழில்: கே. நல்லதம்பி

ரூ. 295

கன்னட இலக்கித்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான வசுதேந்திராவின் கதைகள் அடங்கிய இந்தத் தொகுப்பு தனித்துவமானது. தன்பாலின ஈர்ப்புக் கொண்ட ஒருவனின் கதைகளைச் சொல்லும் இந்தத் தொகுப்பு புனைவுலகில் பேசாப்பொருளைத் துணிந்து பேசுகிறது.

தன்னுடைய தன்பாலின ஈர்ப்பை வெளிப்படையாக அறிவித்துக்கொண்டவரான வசுதேந்திரா இந்தக் கதைகளில் அத்தகைய ஒருவனின் அக, புற உலகினூடே துணிச்சலுடன் பயணிக்கிறார். மானுட உறவுகளின் இதுவரை வெளிச்சத்துக்கு வராத பல்வேறு பகுதிகளைத் தயங்காமல் நம் பார்வைக்கு வைக்கிறார்.

### சிறுகதைகள்




## ஆலோ ஆலோ

**பா.அ. ஜயகரன்**

ரூ. 200

போர், புலம்பெயர்வு, மேற்குலக வாழ்வு போன்ற சமகால நிகழ்வுகளின் தாக்கங்களினால் பாரிய சமூக, பண்பாட்டு, பொருளாதார மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கும் தமிழ்ச் சமூகத்தின் புதிய பிரதியாக ஜயகரனின் படைப்பு முக்கியம் பெறுகிறது.

புதிய கதைக் களமும் கதை மாந்தர்களும் எளிய மொழி நடையும் தமிழ் வாசகர்களுக்கு மாற்று வாசிப்பு அனுபவத்தைத் தருகின்றன. அரசியல் எல்லைகள் தாண்டிப் புகலிடத்தின் புது அனுபவங்களுக்கூடாகத் தமிழ் இலக்கிய வெளிப்பாட்டில் நிலவும் எல்லைகளைத் தாண்டும் எழுத்து இது. இக்கதைகள் தமிழின் முக்கியமான படைப்புகளாகக் கொள்ளத்தக்கவையாகும்.





## கற்றாழை

ஐ. கிருத்திகா

ரூ. 140

பெண்ணுலகம் எதனையெல்லாம் கொண்டு துயருறுகிறது? அவர்களுக்குத் தங்களின் மனங்கள்போலவே உடல்களும் சுமையாக மாறுகின்றன. தன்னிலையைச் சமூக நிலையோடு பொருத்த வேண்டிய அவசியத்துக்குள்ளும் திணிக்கப்படுகிறார்கள். அந்தப் போராட்டங்களின் அவசங்களையும் மன எழுச்சியையும் இயல்பான சொற்களுக்குள் வடித்தெழுதுகிறார் கிருத்திகா. பெண்களின் அக உலகம் அவர்கள் உடல்களினின்றும் வேறானவையல்ல என்பதை ஒரு பெண்ணின் பார்வையில் சொல்லும் கதைகள் இவை.




## சுரேஷ்குமார இந்திரஜித் சிறுகதைகள் (1981-2020)

சுரேஷ்குமார இந்திரஜித்

ரூ. 825

மேகத்திலிருக்கும்போதும், தரையிறங்கிப் பாயும்போதும் நீரின் அந்தரங்கம் மாறுவதில்லையே! கதைகளின் உருவம், சொல்முறை, மொழி அமைப்பு என மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டாலும், சுரேஷ்குமார இந்திரஜித் கதைகளில் மாறாத அம்சம் ஒன்று உள்ளது. பொதுச் சமூகத்துக்கு எதிர்க் குரலாக இயங்குபவை இந்தக் கதைகள். வல்லானோ பெரும்பான்மையோ உருவாக்கி நிலைப்படுத்திய பொதுக்களத்தின் நடுவே நின்று, தீவிரமான எதிர்க் குரலில் பேசுபவை இந்தக் கதைகள்.

சமூகத்தின் நியதிகளுடன் ஒட்டி ஒழுகும் வாசக மனத்துக்கு இக்கதைகள் வனைந்து அளிக்கும் அனுபவம் புதிதானது; அசலானது. ஏற்கனெவே தெரியவந்த சங்கதிகளிலும் புதிய மர்மங்களை தொனிக்கவைப்பது. எனவே, பழகிய அனுபவமாக இருந்தபடியே புதிய உச்சங்களுக்கு இட்டுச்செல்வது. நவீனத் தமிழ்ச் சிறுகதையின் தவிர்க்க முடியாத முன்னோடிகளில் ஒருவர் சுரேஷ்குமார இந்திரஜித் என்பதை இவை உறுதிசெய்கின்றன.

**யுவன் சந்திரசேகர்**





## மகா மாயா

குமாரநந்தன்

ரூ. 340

குமாரநந்தன் கதைகள் தத்துவங்களாலும் கடவுள்களாலும் கைவிடப்பட்ட அல்லது தத்துவங்களிலிருந்தும் கடவுள்களிடமிருந்தும் விடுதலை பெற்றுக்கொண்ட இடத்தில் பிறக்கின்றன. வாழ்வில் சாத்தியமுள்ள வெவ்வேறு நிகழ்தகவுகளால் உருவாகும் சம்பவங்களைக் கதாபாத்திரங்களின் அருகருகே வைக்கும்போது ஏற்படும் மரணத்துக்கு நெருக்கமான அல்லது வாழ்வையே புரட்டிப்போடும் நிகழ்வுகள் இவரிடத்தில் கதைகளாக உருக்கொள்கின்றன. காலாவதியாகிப்போன விவரித்தல் மொழி யிலோ அல்லது வழவழப்பான ரொமான்டிக் கூறுமுறையிலோ அல்லாமல் நேரடியாகவும் கச்சிதமாகவும் கூர்மையாகவும் விவரிப்படுவது இவர் கதைகளின் பலம். அதிகார நிறுவனங்களால் எளிய மனிதர்களுக்கு ஏற்படும் துயரங்களின் வழியே, வாழ்வின் புதிர்களுக்குள், முடிவற்ற தர்க்கங்களுக்குள் வாசகனைத் தள்ளிவிடுபவராக இருக்கிறார் குமாரநந்தன்.

**குமார் அம்பாயிரம்**





## வண்ணநிலவன் சிறுகதைகள் (1970-2011)

வண்ணநிலவன்

ரூ. 790

வண்ணநிலவனின் கதாபாத்திரங்கள் வாழ்க்கைச் சோதனையில் அனைத்தையும் பறிகொடுத்த பின்னரும் அன்பின் நெகிழ்ச்சியைத் தக்க வைத்துக்கொண்டிருப்பவர்கள். மனிதனை மனிதனாகக் காண்பதற்கு இவருக்குக் கடைசியாக மிஞ்சியிருக்கும் அடையாளம் இதுதான். கதை மரபிலிருந்து விடுபட்டுச் சிறுகதைக்குரிய சிக்கனம், குறிப்புணர்த்தல், குறைவாகக் கூறி அனுபவ அதிர்வுகளுக்கு இடம் தரும் பாங்கு ஆகிய சிறுகதைக்குரிய சிறப்பம்சங்களை இவரது கதைகளில் காணலாம்.

**சுந்தர ராமசாமி**




## கோடைகாலத்தின் சாலை

பா. ராஜா

ரூ. 125

தொடர்ச்சியான உறவுகளில், வாழ்நிலைகளில் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் நெருக்கங்களும், நெருடல்களுக்கும் பிறகான மன அமைதியில், வெற்றிடத்தில், மனப்பிறழ்வில், ஆகக்கடைசியிலான தேடலில் நமது கைகளுக்குள் தங்கிக்கொள்ளும் சில உணர்வுகளின் ஈரமான தடத்தைப் போலவே இக்கதைகள் நம்முள் தங்கிக்கொள்கின்றன.

கைவிடப்பட்ட வழியில், சந்திப்பில் தோன்றி மறைந்து போகும் சில முகங்களின் சிறு சிறு ஞாபகங்களும், தொடர்ச்சிகளும், முடிவுகளும் இப்படித்தான் நம்மை நிலை குலைய வைக்கின்றன. வாழ்வு எப்போதும் கச்சிதத்தன்மையற்றது. அதைத்தான் இக்கதைகள் பட்டவர்த்தமாக எடுத்துக் காண்பிக்கின்றன.

**ஜீவன் பென்னி**




## முரட்டுப் பச்சை

லாவண்யா சுந்தராஜன்

ரூ. 200

மரபார்ந்த கதைக்களன்களிலிருந்து மாறுபட்டுச் செல்கின்றன லாவண்யாவின் சிறுகதைகள். தகவல் தொழில்நுட்பத் துறையில் பெண்களின் இருப்பு, அவர்களின் பிரத்யேகமான பிரச்சினைகள், துறை சார்ந்த நெருக்கடிகள், குடும்ப சக பணியாளர்களுடனான உறவுகளில் ஏற்படும் மாற்றங்கள், விரிசல்கள், உறவுச் சிக்கல்கள் ஆகியவற்றை இவரின் சிறுகதைகள் கவனப்படுத்துகின்றன.

இவை பெண்களின் கதைகள் மட்டுமன்று. ஆண்களின் பிரச்சினைகளும் அவை அவர்களைச் சிதைக்கும் வழிவகைகளையும் ஆராய முயலும் கதைகள். பெண்ணின் நோக்கிலிருந்து சொல்லப்படாததே இந்தக் கதைகளின் முக்கிய அம்சம். அமைப்புகளின் வன்முறை, அதிலிருந்து மீளத் தடுமாறும் மனிதர்கள் எனப் புனைவுலகின் எல்லைகளை இக்கதைகள் விரிவுபடுத்துகின்றன. புதிய களம், புதிய வாசிப்பனுபவம்.




## பெருமைக்குரிய கடிகாரம்

**ஜே.பி. சாணக்யா**

ரூ. 190

சாணக்யாவின் சொற்கள் மந்தகாச தொனியும் மந்திரப் பண்பும் கொண்டவை. கடலால் சூழப்பட்ட கண்டத் துணுக்குகளைப் போல அண்டப் பேரியக்கத்தின் நடுவே மனித உயிரியின் அற்பச் சலனலங்களை இந்தச் சொற்களால் அவர் பதிவுசெய்கிறார். குற்றம், ஏழ்மை, நோய்மை ஆகியவற்றை இயல்புகளாகக் கொண்ட அந்தச் சலனம் பேரியக்கத்தின் கதியில் சிலவேளை தண்டிக்கப்படலாம்; சிலவேளை மன்னிக்கப்படலாம். ஆனால் பேரண்டத்தின் பெருங்கருணை ஒருபோதும் அந்த மீச்சிறு சலனத்தைத் தன் கதியிலிருந்து விலக்கிவைப்பதைச் சாணக்யாவின் புனைவுகள் ஒப்புக்கொள்வதில்லை.

**பா.வெங்கடேசன்**




## சரோஜா திறக்கும் உலகம்


(தேர்ந்தெடுத்த சிறுகதைகள்)

**சரோஜா ராமமூர்த்தி**

(ப-ர்): அம்பை

ரூ. 375

தன் கதைகளில் எதையும் விளக்க முற்படுவதில்லை சரோஜா ராமமூர்த்தி. எந்த நிகழ்வையும் கதாபாத்திரத்தையும் அலசி ஆராய்ந்து இதனால் இது என்று நியாயப்படுத்துவதில்லை. தீர்ப்புக் கூறும் பொறுப்பையும் ஏற்பதில்லை. இதைத்தான் மிகையில்லாமல் "குறைபடவே சொல்லல்" என்று க.நா.சு. பாராட்டியிருக்கிறார். அவர் பாணியில், அவர் நோக்கில் அவர் எழுதிய கதைகளை ஒரு தொகுப்பாக இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு கொண்டுவந்து மீண்டும் அவரை எல்லோருக்கும் அறிமுகம் செய்துவைக்க இதுவும் ஒரு காரணம். மீண்டும் சரோஜா ராமமூர்த்தியைப் படிக்கும் உந்துதலை இத்தொகுப்பு அளிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.




## சேத்துமான் கதைகள்


தயாரிப்பாளர் பா. இரஞ்சித் அணிந்துரை

இயக்குநர் தமிழ் முன்னுரை

**பெருமாள்முருகன்**

ரூ. 95

'வறுகறி', 'மாப்பு குடுக்கோணுஞ் சாமீ' ஆகிய கதைகளைத் திரைப்படமாக உருமாற்றியதில் பெருமாள் முருகனின் பங்கும் அளப்பரியது. மனிதர்களின் எண்ணவோட்டங்களைக் காட்சியாக மாற்றுவதென்பது சவாலானது. அது மிக லாகவமாகப் பெருமாள்முருகனுக்குக் கைகூடியிருக்கிறது சிறுகதையாகப் படித்தபோதிருந்த அதே அதிர்வு திரைக்கதையாகவும் படிக்கும்போது ஏற்படுவதென்பது அரிது. பெருமாள் முருகனும் தமிழும் அதை அழகாகச் செய்திருந்தனர்.





## பாயசம்

**தி. ஜானகிராமன்**

ரூ. 375

தெளிவும் கச்சிதமும் ஈரமும் நிரம்பியவை தி. ஜானகிராமன் கதைகள். காலத்தோடும் மொழியோடும் ஒட்ட ஒழுகியவை. அதே வேளையில் காலத்தை விஞ்சியும் மொழியைக் கடந்தும் விரிவுகொள்பவை. இன்றைய வாசிப்பிலும் புதிதாக மிளிர்பவை. புதிய அர்த்தங்களுக்கு இணங்குபவை. எல்லாத் தரப்பு வாசகருக்கும் அணுக்கமானவை.

அ | க | ரா | தி




## தமிழ் வேளாண் கலைச்சொற்களின் வட்டார வேறுபாட்டு அகராதி

**நீ. ராஜசேகரன் நாயர், ச. ராஜா, சா. சுந்தரபாலு**

ரூ. 390

- பொருள் உணர்வோடும் வட்டார வழக்கு ஒப்பீட்டோடும் உருவாக்கப்பட்ட முதல் வேளாண் கலைச்சொல் அகராதி
- 4133 தலைச்சொற்கள்
- 95 தலைச்சொல்லிற்கான படங்கள்
- அகராதியியல், மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

கு | று | ங் | க | தை | க | ள்




## தாரிணியின் சொற்கள்

**சுரேஷ்குமார இந்திரஜித்**

ரூ. 180

இத்தொகுப்பில் உள்ள குறுங்கதைகள் மனித உறவுகளிடையில் அரங்கேறும் நாடகத் தருணங்களைப் பகடி செய்து அவற்றின் முரண்பாட்டைக் குறிப்புணர்த்துகின்றன. பல கதைகள் வாழ்க்கை குறித்த மரபான நம்பிக்கைகளைத் தகர்ப்பவை. கதைத்தன்மைக்குப் பதிலாக எளிதில் கடந்துவிட முடியாத நுண்சித்தரிப்புகளை முன்வைக்கின்றன. அலங்காரங்களுக்கும் வர்ணனைகளுக்கும் இடமளிக்காத சுரேஷ்குமார இந்திரஜித்தின் எழுத்து இந்தத் தொகுப்பில் மேலும் செறிவாக வெளிப்பட்டு குறுங்கதை இலக்கியத்தில் ஒரு முக்கியமான முன்னகர்வை நிகழ்த்தியுள்ளது.

த | மி | ழ் | கி | ளா | சி | க் | க | ட் | டு | ரை




## கடவுளுக்கு வேலை செய்பவர்

**அ. முத்துலிங்கம்**

ரூ. 320

இந்த நூலில் விதவிதமான வாழ்வுகள் உண்டு. விஞ்ஞானம் உண்டு. வரலாறு உண்டு. தொன்மம் உண்டு. விளையாட்டு உண்டு. நகை உண்டு. தமிழும் கவிதையும் உளது. இவை யாவும் இலக்கியமாகும் ரசவாதம் இதன் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு. ஒரு பக்கத்திலேனும் கொட்டாவி இல்லை.

## கிளாசிக் பயணக் கட்டுரை




### உதய சூரியன்

(ஜப்பான் பயணக் கட்டுரைகள்)


தி. ஜானகிராமன்

ரூ. 175

சிறுகதை, நாவல்களில் சாதனைப் புகழ் ஈட்டிய தி. ஜானகிராமன் எழுதிய முதலாவது பயணக் கதை இது. அவரது தனித்துவமான கலைத் திறனால் முன்னுதாரணமற்ற பயண நூலாகவும் நிலைபெற்றிருக்கிறது.

ஜப்பானில் தங்கியிருந்தும் பயணம் செய்தும் பெற்ற அனுபவங்களை தி. ஜானகிராமன், புனைகதைக்குரிய அழகுடனும் சுற்றுலாக் கையேட்டுக்குரிய நுட்பமான தகவல்களுடனும் இந்தக் கட்டுரைகளில் முன்வைக்கிறார். அந்த நாட்டின் இயற்கை வளத்தையும் பொருளாதார மேம்பாட்டையும் பண்பாட்டுப் பின்புலத்தையும் கலை மேன்மையையும் அந்த மண்ணின் மக்களை முன்னிருத்தியே விவரிக்கிறார். ஒரு பயணக் கதையை வாசக மனதை விட்டு அகலாத இலக்கியப் படைப்பாகத் தமது மந்திரச் சொற்களால் உருவாக்கியிருக்கிறார் தி. ஜானகிராமன்.

## மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்




### எதிர்ப்புக் குரல்கள்


ரொமிலா தாப்பர்

தமிழில்: தி.அ. ஸ்ரீனிவாஸன்

ரூ. 200

இந்த நூலில் ரொமிலா தாப்பர், இந்திய வரலாற்றின் மூன்று ஆயிரங்களைச் சேர்ந்த எதிர்ப்புக் குரல்களை எடுத்துக்கொண்டு, இந்தக் குரல்கள் இந்து சமயம் என்று இன்று பெயரிட்டு அழைப்படும் சமயத்திலும் இந்தியச் சமூகத்திலும் ஏற்படுத்திய சலனங்களை ஆராய்கிறார்.

ஒவ்வொரு நவீன சமூகத்திலும் பேச்சுரிமையின் ஒரு பகுதியாக எதிர்ப்பைத் தெரிவிக்கும் உரிமையும் குடிமகனுக்கு நிச்சயம் இருந்தாக வேண்டும். எதிர்ப்புக் கருத்துகளை விவாதத்திற்குட்படுத்த வேண்டும். எதிர்ப்பு என்றாலே வன்முறை புரட்சி என்று கொள்ளக் கூடாது; அதன் பொருள், விடைகள் வேண்டி நிற்கும் தர்மசங்கடமான கேள்விகளைப் பண்பட்ட முறையில் விவாதிப்பதுதான்.



### நான் ஏன் இந்துப் பெண் அல்ல

வந்தனா சொனால்கர்

தமிழில்: ம. சுசித்ரா

ரூ. 200

இந்து மதம் சாதியத்தில் மட்டுமின்றி ஆணாதிக்கத்திலும் ஊறியது என்று கூறும் வந்தனா, இந்து மதம் சார்ந்த நூல்களையும் அதன் சமூக மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் ஆதாரமாகக் கொண்டு தன் பார்வையை முன்வைக்கிறார். பல்வேறு அடுக்குகள் கொண்ட இந்த நூல் இந்து மதம் குறித்த கூர்மையானதும் காத்திரமானதுமான விமர்சனத்தை முன்வைத்துச் சமகால அரசியல் உரையாடலுக்குப் புதிய பரிமாணத்தைச் சேர்க்கிறது. இன்றைய காலகட்டத்தில் “உயர்” சாதியைச் சேர்ந்த பெண்ணியவாதியாக இருப்பது என்றால் என்ன என்பது குறித்த தன்வரலாற்றுத் தன்மை கொண்ட துணிச்சலான விசாரணை இந்த நூல்.

## கட்டுரைகள்





### கவிதை: இன்றுமுதல் அன்றுவரை

வண்ணநிலவன்

ரூ. 100

தமிழின் நவீன கவிதைகள்மீது பலரும் பல விதமான பார்வைகளை முன்வைத்திருக்கிறார்கள். மூத்த படைப்பாளியான வண்ணநிலவன் தன்னுடைய பார்வையில் தமிழ்க் கவிஞர்களை அணுகுகிறார். சமகாலக் கவிஞர்களிலிருந்து தொடங்கிப் பின்னோக்கிப் பயணிக்கும் இந்த அலசல்கள் தமிழின் முக்கியமான கவிஞர்கள் பலருடைய கவிதைகளைக் கறாராக அணுகி மதிப்பிடுகின்றன.

யவனிகா ஸ்ரீராம், போகன் சங்கர் ஆகியோரிலிருந்து ந. பிச்சமூர்த்திவரையிலுமான பயணமாக விரியும் இந்தக் கட்டுரைகள் கவிதை உலகை ஊடுருவிப் பார்க்கக்கூடிய வெளிச்சத்தைக் கொண்டிருக்கின்றன.




### அழகில் கொதிக்கும் அழல்

இசை

ரூ. 130

பழந்தமிழ் சொல்லிணைவுகள் மீதும், அது உருவாக்கும் ஆழமான பொருள் மீதும் தீரா மயக்கம் கொண்டவர் கவிஞர் இசை. இக்கட்டுரை நூலில் நமது நீண்ட கவி மரபின் கண்ணிகளைக் காட்சிக்கு வைக்கிறார். பழந்தமிழ்ப் பாடல்களைப் பம்பரமாயும், நவீன கவிதைகளைச் சாட்டையெனவும் பாவித்து இசை சுழற்றுகையில் உண்மையில் பெரும் ஆட்டம் கழ்ந்துவிடுகிறது.

காமத்தையும் காதலையும் அழகையும் ஆன்மீக நிலையில் வைத்துப் பார்க்கும் இசையின் கண்களில் கொஞ்சம் திவ்யம் கூடியிருக்கிறது.

சாம்சன்




### நான் கண்ட எழுத்தாளர்கள்


கு. அழகிரிசாமி

(ப-ர்): பழ. அதியமான்

ரூ. 275

புதுமைப்பித்தன், வ.ரா., தி.ஜ.ர., டி.எஸ். சொக்கலிங்கம் உள்ளிட்ட நவீன எழுத்தாளர்கள், டி.கே.சி., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு.வி.க., வெ. சாமிநாத சர்மா, வெ.ப. சுப்பிரமணிய முதலியார் போன்ற பழந்தமிழ் அறிஞர்கள் உள்ளிட்ட தமிழ் ஆளுமைகளைப் பற்றி கு. அழகிரிசாமி எழுதிய நினைவுரைகள் இந்த நூல். இசைக் கலைஞர் காருகுறிச்சி அருணாசலம், பதிப்பாளர் சக்தி வை. கோவிந்தன், மஞ்சேரி ஈஸ்வரன், தொ.மு.சி. ரகுநாதன், துறைவன், ர.பா.மு. கனி ஆகிய எழுத்தாளர்கள் பற்றிய நினைவுக் குறிப்புகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

அனுபவம், நினைவு, அறிமுகம் ஆகியவற்றோடு விமர்சனமும் இழையோட சுவாரஸ்யமான மொழியில் அமைந்த நூல் இது.




## கண்ணாடிச் சொற்கள்

ஜி. குப்புசாமி

ரூ. 240

மொழிபெயர்ப்பாளராகவே அதிகம் அறியப்பட்ட ஜி. குப்புசாமியின் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு இது. தான் ரசித்துப் படித்த, பார்த்த, கேட்ட, வியந்த, கற்றுக்கொண்ட ஆளுமைகளையும் படைப்புகளையும் பற்றிக் குப்புசாமி விரிவாகவும் காத்திரமாகவும் எழுதியிருக்கும் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல். உலக இலக்கியம்முதல் உள்ளூர் இலக்கியம்வரை; சார்வாகன்முதல் ஸரமாகோவரை; எஸ்.பி. பாலசுப்பிரமணியம்முதல் ரோஜர் ஃபெடரர்வரை எனப் பல்வேறு படைப்புகளையும் ஆளுமைகளையும் பற்றிய விரிவான சொற்சித்திரங்களைக் கொண்ட நூல் இது. மிகுதியும் அறிவுத் தளத்தில் நிதானமாக இயங்கும் குப்புசாமியின் எழுத்து தேவையான இடங்களின் உணர்ச்சிப் பிரவாகமாகப் பாயவும் செய்கிறது. இந்நூலில் இடம்பெறும் ஆளுமைகள், படைப்புகள் ஆகியவற்றை அறியாதவர்களுக்கு இவை சிறந்த அறிமுகங்களாக அமையும். ஏற்கெனவே அறிந்தவர்களுக்குப் புதிய திறப்புகள் சாத்தியமாகும்.



## உயிர்பெறும் புனைவுச் சித்திரங்கள்

அரவிந்தன்

ரூ. 130

அரவிந்தனின் இக்கட்டுரைகள், எளிமையான தோற்றத்திலிருக்கும் பிரம்மாண்டமான உலகத்தின் சொற்கள், படைப்பு, படைப்பாளி, வாசகர், வாசிப்பு, மொழி, நூலகம் என்று இலக்கியச் செயல்பாடுகளின் அக, புறக்கூறுகளை இக்கட்டுரைகள் அலசுகின்றன, படைப்பின் வியத்தகு கூறுகளை நடைமுறை வாழ்வுடன் இணைத்துப் பேசும் கட்டுரைகளுடன் மொழியைப் பற்றிய நுட்பமான, கூர்மையான அலசல்களும் உள்ளன. சொல் தனக்கு முன்னும் பின்னுமாகக் கொண்டுள்ள அரசியலையும் தத்துவத்தையும் அறிந்துகொள்ள உதவக்கூடிய கட்டுரைகளைக் கொண்ட நூல் இது.




## நாள் மலர்கள்

தொ. பரமசிவன்

(விலையடக்கப் பதிப்பு)

ரூ. 75

இத்தொகுப்பில் பன்னிரண்டு கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாள் மலர்தான். நூல் முழுவதுமாக ஊடாடும் பார்வை தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு செல்வங்களை அறிந்து துய்த்தல் என்பது. தமிழ்ப் பெருமை பேசுவதாகவோ வெறும் தகவல் அடுக்காகவோ எந்தக் கட்டுரையும் இல்லை. ஒவ்வொரு கட்டுரையிலும் தகவல்களும் பார்வையும் இயைந்திருக்கின்றன. மதுரை மாநகரம் பற்றிய கட்டுரை வரலாற்றில் தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரமாக அது தொடர்ந்து விளங்கிவருகிறது என்னும் பார்வையை முன்வைக்கிறது. தமிழக வரலாற்றில் இடையறாது தொடர்ந்து பதிவுபெற்றுள்ள நகரங்கள் மதுரையும் காஞ்சிபுரமும்தான் என்னும் முக்கியமான தகவலைக் கட்டுரை போகிறபோக்கில் சொல்லிச் செல்கிறது. தொ.ப.வுக்கே உரிய அடையாளங்கள் கட்டுரைகளில் மிளிர்கின்றன. தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றைப் பருந்துப் பார்வையில் காட்டும் நூலாகப் பொதுவெளியில் இதைச் சுட்ட விரும்புகிறேன்.

**பெருமாள்முருகன்**




## அழகர் கோயில்

தொ. பரமசிவன்

(தொ-ர்): ஆ. இலக்குவன்

(விலையடக்கப் பதிப்பு)

ரூ. 225

தொ. பரமசிவன், நாற்பதாண்டுகளுக்கு முன் எழுதிய இந்த ஆய்வு நூல் சிற்பக் கலை, கட்டடக் கலை என்பதாக இருந்த கோயில் ஆய்வு செல்நெறியை மாற்றிக் கோயிலின் இயக்கத்திற்கும் அங்கு வாழும் எளிய மக்களுக்கும் உள்ள தொடர்பை விளக்கும் பண்பாட்டு ஆய்வாக விளங்குகிறது.



## மரணத்தின் கதை

ஆசுதோஷ் பரத்வாஜ்

தமிழில்: அரவிந்தன்

ரூ. 430

நக்சல்பாரிகள் எனக் குறிப்பிடப்படும் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கும் அரசு ராணுவ, காவல் படையினருக்கும் சத்தீஸ்கர் மாநிலத்தின் வனப்பகுதியில் நடந்துவரும் போரைக் குறித்த நேரடிப் பதிவுகளைக் கொண்ட நூல் இது. நக்சல் பிரச்சினை குறித்து நாளிதழில் செய்திக் கட்டுரை எழுதுவதற்காகக் காடுகளுக்குச் சென்ற இதழியலாளர் ஆசுதோஷ் பரத்வாஜ் வனாந்தரத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் உணர்வுகளையும் இந்நூலில் பதிவுசெய்கிறார். புனைகதை எழுத்தாளருமான ஆசுதோஷ் பரத்வாஜ் பின்நவீனத்துவ நாவலைப் போன்ற வடிவத்தில் வனத்தின் சிக்கலான யதார்த்தங்களைப் பதிவுசெய்திருக்கிறார்.




## ஆடிய ஆட்டமென்ன

கிரிக்கெட் பற்றிய அனுபவப் பதிவுகள்

அசோகமித்திரன்

ரூ. 100

எதைப் பற்றி எழுதினாலும் அலாதியான பார்வையுடனும் அடியோட்டமான அங்கதத்துடனும் எழுதியவர் அசோகமித்திரன். அந்தக் காலத்தின் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினருடன் பிரிக்க முடியாமல் பிணைந்திருந்த கிரிக்கெட், அசோகமித்திரனையும் விட்டுவைக்கவில்லை. உள்ளூர் கிரிக்கெட் குழுவின் தலைவராகவும் உலக கிரிக்கெட்டின் தீவிரமான பார்வையாளராகவும் இருந்த அசோகமித்திரன் தான் ஆடிய ஆட்டங்களையும் அவதானித்த ஆட்டங்களையும் பற்றித் தொடராக எழுதியிருக்கிறார்.

கிரிக்கெட்டின் அழகியலைக் காட்டிலும் அதன் உளவியலுக்கும் ஆட்டத்தின் புதிர்களுக்கும் அழுத்தம் தரும் அசோகமித்திரனின் எழுத்து கிரிக்கெட்டை மாறுபட்ட கோணத்தில் பார்க்க உதவுகிறது. இந்தக் கட்டுரைகள் முதல்முறையாகத் தற்போது நூல் வடிவம் பெறுகின்றன.




## ஒரு பார்வையில் சென்னை நகரம்

**அசோகமித்திரன்**

ரூ. 160


சென்னை நகரத்தைப் பற்றிப் பலவிதமான பதிவுகள் குவிந்து கிடக்கின்றன. வரலாறு, சமூகம், உள்கட்டமைப்பு, பண்பாடு எனப் பல்வேறு கோணங்களில் பலரும் சென்னையைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். அவற்றில் தனித்து நிற்பது அசோகமித்திரனின் பதிவு. சென்னையின் இயல்பையும் அதன் மாற்றங்களையும் புரிந்துகொள்ள இந்த நூல் பெரிதும் துணைபுரியும்.



## போக்குவரத்து உருவாக்கமும் ஜாதிகளின் உருமாற்றமும்

**கோ. ரகுபதி**

நின்றும் நகந்தும் நீராவியாலும் எண்ணையாலும் இயங்கும் எந்திரங்களைக் கண்டுபிடித்த பிரித்தானியர் இவை ஓடுவதற்கான நில, நீர் வழி இருப்புப் பாதையையும் சாலையையும் பண்ணையாட்களின் உடலுழைப்பாலும் மக்களின் வரியாலும் உருவாக்கினார்கள். பிரித்தானிய இந்தியாவின் மதராஸ் மாகாணத்தை சென்னை – தூத்துக்குடி, நாகப்பட்டினம் துறைமுகங்கள் வழியாக இங்கிலாந்துடன் இணைத்தார்கள். திராவிட மொழிகள் பேசும் கிராமங்களை Great Southern Trunk Road வழியாக மெட்ராஸோடு இணைத்தார்கள். இவற்றையெல்லாம் விரிவாகப் பேசுகிற இந்நூல், இந்த நவீனப் போக்குவரத்துச் சாதனங்கள் கிராமந்தோறும் கட்டப்பட்ட சமத்துவமற்ற சாதிய அரசியல் பொருளாதாரக் கண்ணிகளையறுத்து எறிந்தன. உற்பத்திக் கருவிகளான பண்ணையாட்களைக் கொத்துக் கொத்தாய் உலகெங்கும் கொண்டு சென்றதாலும் பிரித்தானியரின் நவீன அதிகாரத்தை ஆக்கிரமிக்க உழைக்காத ஒட்டுண்ணிகள் ஓடோடியதாலும் சாதிகள் உருமாறின. இந்த மாற்றங்களை இந்நூல் அலசி ஆராய்கிறது.




## தமிழ்ச் சான்றோர்கள்

**அ.கா. பெருமாள்**

ரூ. 325

அ.கா. பெருமாள் எழுதிய 'தமிழறிஞர்கள்' என்ற நூலின் இரண்டாம் பகுதிதான் 'தமிழ்ச் சான்றோர்கள்.' இதில் 35 தமிழறிஞர்கள் பற்றிய செய்திகள் உள்ளன. முந்தைய நூலைப் போலவே தமிழறிஞர்களின் வாழ்க்கை, அவர்கள் எழுதியவை பற்றிய தகவல்கள் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. அக்காலத் தமிழறிஞர்களிடம் சமஸ்கிருத வெறுப்பில்லை; 1894இல் ஜெர்மனியிலிருந்து ஸ்லேட் வந்தாலும் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் 1920வரை மணலில் எழுதிப் பழகினர்; தமிழறிஞர்களில் பலர் நடுத்தரக் குடும்பத்தினர்; அவர்களில் பலர் அச்சுப் புத்தகத்தின் வழி படித்தாலும் ஏட்டைப் படிக்கும் திறனும் பெற்றிருந்தனர் எனப் பல செய்திகளைப் போகிறபோக்கில் நூலாசிரியர் சொல்லிக்கொண்டே போகிறார். கடின உழைப்பில் உருவான நூல் இது.

**பேராசிரியர். தெ.வே. ஜெகதீசன்**




## பாரதியும் குள்ளச்சாமியும்

**ய. மணிகண்டன்**


ரூ. 135

"ஞாயிற்றைச் சங்கிலியா லளக்க லாமோ?

ஞானகுரு புகழினைநாம் வகுக்க லாமோ?"

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அறைகூவல் விடுத்த லோகமானிய திலகர், விவேகானந்தப் பெருஞ்சுடரை முன்னெடுத்த நிவேதிதாதேவி ஆகியோர் மட்டுமல்ல, புதுச்சேரித் தெருக்களில் பித்தனைப் போல் திரிந்த ஒரு பரதேசியும் மகாகவி பாரதிக்கு ஒரு ஞானகுரு. அவர்தான் குள்ளச்சாமி என்னும் மாங்கொட்டைச்சாமி. பாரதிக்கும் குள்ளச்சாமிக்குமான உறவு ஆழமானது; அற்புத நிகழ்வுகளின் அடுக்குகளைக் கொண்டது.

பாரதியின் நேரடி வாழ்வில், கவிதைகளில், உரைநடை எழுத்துகளில், சொற்பொழிவு நிகழ்ச்சியில் குள்ளச்சாமி பெற்றுள்ள இடம் தனித்துக் குறிப்பிடத்தக்கதாகும். இருவருக்குமான தொடர்பு வரலாற்றைத் துலக்கிக் காட்டும் இந்நூலைப் புதிய ஆவணங்களையும் அதிகாரபூர்வமான மூல ஏடுகளின் பதிவுகளையும் கொண்டு உருவாக்கியிருக்கிறார் பாரதி அறிஞர் ய. மணிகண்டன்.



## பதிப்பும் படைப்பும்

**கண்ணன்**

1990களின் நடுப்பகுதியில் காலச்சுவடு பதிப்பகத்தைத் தொடங்கித் தமிழின் முன்னணிப் பதிப்பகங்களில் ஒன்றாக அதை வளர்த்தெடுத்துள்ள கண்ணன் பதிப்பு, பதிப்பகம், காப்புரிமை, இலக்கியம் சார்ந்த அயலுறவு முதலான பொருள்கள் குறித்துப் பல்வேறு தருணங்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல்.

தமிழ்ப் பதிப்புலகம் குறித்துக் கண்ணன் தொடர்ந்து முன்வைத்துவரும் பல்வேறு கனவுகள் நனவாகத் தொடங்கியிருக்கும் தருணத்தில் இந்த நூல் வெளியாவது மிகவும் பொருத்தமானது.





## மயிர்தான் பிரச்சினையா

கல்விசார் கட்டுரைகள்

**பெருமாள்முருகன்**

ரூ. 200

நம் கல்விமுறையில் நிலவும் நடைமுறைப் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதிய கட்டுரைகள் இவை. கல்வி இன்று சேவையாக இல்லை; தொழிலாக இருக்கிறது. கல்வி பற்றிய புனித பிம்பங்கள் உதிர்ந்துவிட்டன. இச்சூழலில் கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகளை வெளியுலகப் பார்வைக்கு வைக்கும் நோக்கில் எழுதப்பட்ட கட்டுரைகள் இவை. மாணவர்களை நோக்கியதாகப் பாடத்திட்டம், கற்பித்தல் முறை, ஆசிரிய அணுகுமுறை, அரசுத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்தும் இருக்க வேண்டும் என்னும் பார்வையை அடிப்படையாகக் கொண்ட இவை வெளியானபோது பல்வேறு எதிர்வினைகளைப் பெற்றவை.




## கிழக்கும் மேற்கும்

மு. இராமநாதன்

ரூ. 290

சீனாவின் வளர்ச்சியும் வறுமை ஒழிப்பும் முன்னுதாரணம் இல்லாதவை. இவை சீனாவின் ஒரு முகம். யதேச்சதிகாரமும் மேலாதிக்கமும் இன்னொரு முகம். இந்த நூலில் இடம்பெறும் கட்டுரைகள் இந்த இரண்டு முகங்களையும் படம்பிடிக்கின்றன.

ஹாங்காங்கின் சுயாட்சியையும் தைவானின் எழுச்சியையும் கலங்கிக் கிடக்கும் தென் சீனக் கடலையும் வரலாற்றுக்கு முகம்கொடுக்க மறுக்கும் ஜப்பானையும் கிழக்காசியக் கட்டுரைகள் பேசுகின்றன. அகதிகள் ஆக முடியாத ஈழத் தமிழர்களும், எவராலும் கவனிக்கப்படாத பர்மீயத் தமிழர்களும் நூலில் இடம்பெறுகிறார்கள். உக்ரைன் போரின் நதிமூலமும் இந்திய சீன எல்லைச் சிக்கலும் மியான்மர் கடந்து வந்த பாதையும் விரிவாகப் பேசப்படுகின்றன.




## ஓவிய பாரதி

(ப-ர்): ய. மணிகண்டன்

சுதேசமித்திரனில் தொடர்ந்து பாரதி கவிதைகளுக்கு ஓவியர் கே.ஆர். சர்மாவின் கைவண்ணத்தில்தான் ஓவியங்கள் உருப்பெற்றன. பாரதியின் கவிதைகளை மக்களிடம் பரவலாகக் கொண்டுசேர்த்ததில் இவற்றுக்குத் தனி இடம் உண்டு. எண்பத்து மூன்று ஓவியங்களை முதன்முறையாகக் கண்டெடுத்து அரிய பின்னிணைப்புகளோடும் விரிவான ஆராய்ச்சி முன்னுரையோடும் இத்தொகுதியைப் பாரதி அறிஞர் ய. மணிகண்டன் தமிழுலகுக்கு இந்நூலில் வழங்கியிருக்கிறார். பாரதியியல், இதழியல், கலையியல் என்னும் முக்களங்களிலும் ஒளிபாய்ச்சும் ஓவியத்தொகுதி இது.




## ஆர். ஷண்முகசுந்தரத்தின் படைப்பாளுமை

பெருமாள்முருகன்

ரூ. 190

தமிழ் வட்டார நாவல் இலக்கியத்தின் முன்னோடி ஆர். ஷண்முகசுந்தரம். இருபதுக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியவர். கொங்கு வட்டார மொழியும் வாழ்வும் அவர் படைப்புகளில் துலங்கி நிற்கின்றன. 1942இல் வெளியான 'நாகம்மாள்' நாவலை 'இந்திய வட்டார இலக்கியத்தின் முன்னோடி' என்று க.நா.சு. சொல்கிறார். ஆர். ஷண்முகசுந்தரம் 'மணிக்கொடி' இதழில் சிறுகதைகள் எழுதத் தொடங்கிப் பிறகு நாவலாசிரியராக உருவானார். இந்தி வழியாக வங்க மொழி நாவல்கள் பலவற்றைத் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். அவரது மொத்தப் படைப்புகளைப் பற்றிய அறிமுகமாகவும் விமர்சனமாகவும் இந்நூல் அமைந்துள்ளது. முன்னோடிப் படைப்பாளர் ஒருவரது படைப்புகளை அணுகும் முறைக்குச் சான்றாக இந்நூல் விளங்குகிறது. சுயபார்வை, விமர்சன மொழி, எளியநடை, வாசிப்புத் தன்மை ஆகியவற்றைக் கொண்டு இனிய படைப்புப் பயணமாக விளங்கும் நூல் இது.




## கவிதையின் அந்தரங்கம்


க.வை. பழனிசாமி

ரூ. 250

நவீன கவிதையை எப்படி புரிந்துகொள்வது? நவீன கவிதைகளின் மொத்தச் சொற்களைக் காட்டிலும் கூடுதலான அளவில் அந்தக் கவிதைகளைப் பற்றிக் கவிஞர்களும் விமர்சகர்களும் வாசகர்களும் எழுதியிருக்கிறார்கள்; என்றாலும் நவீன கவிதையின் ரகசியங்கள் பிடிபடாமல் நழுவுகின்றன.

கவிதைக்குள்ளிருந்து கவிதையைப் பேசுவதன் மூலம் இந்தப் புதிரை விடுவிக்க முயல்கிறார் க.வை. பழனிசாமி.

ந. பிச்சமூர்த்திமுதல் அனார்வரை பல தலைமுறைகளைச் சேர்ந்த, பல்வேறு கவித்துவ அணுகுமுறைகள் கொண்ட கவிஞர்களின் கவிதைகளினூடே நிதானமாகப் பயணம் செய்யும் பழனிசாமி, அந்தப் பயணத்தில் தான் அடைந்த தரிசனங்களை இந்நூலில் முன்வைக்கிறார். கவிதையின் ரகசியங்கள், பல்வேறு கவியுலகங்கள் ஆகியவற்றுடன், மாறுபட்ட கவித்துவப் பார்வைகளும் இதில் வெளிப்படுகின்றன.




## கலைவெளிப் பயணி: சிற்பி தனபால்

(தொ-ர்): கிருஷ்ண பிரபு

ரூ. 150

நுண்கலைத் துறையில் சென்னைப் பாணியை உருவாக்கியவர்களில் ஒருவர் சிற்பி தனபால். படைப்பாற்றல் மிக்க சிற்பியாகவும் இணையற்ற ஆசிரியராகவும் கலைத் துறைக்குப் பெரும்பங்காற்றியவர்.

ஓவியம் பயின்றவர்; எனினும் தனபால் தனது கலை ஊடகமாக ஏற்றுக்கொண்டது சிற்பத்தைத்தான். திராவிடக் கலை மரபையும் மேற்கத்திய நவீனத்தின் கூறுகளையும் இணைத்து அவர் உருவாக்கிய சிற்ப மரபு முன்னோடித் தன்மை கொண்டது. அவர் வடித்த ஔவையார், இயேசு, பெரியார் சிற்பங்கள் திராவிடக் கலை மரபுக்குப் புதிய திசைகாட்டிகளாக அமைந்தன. சிற்பி என்ற அளவில் அவரது படைப்புச் சாதனைகள் தனித்துவம் கொண்டவை, நிகரற்றவை.

சிற்பி தனபாலின் வாழ்வையும் கலைப்பணியையும் அவருடைய பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு இந்நூல் நினைவுகூர்கிறது.





## மண் அளக்கும் சொல்

ஆசி. கந்தராஜா

ரூ. 225

இந்நூல் தாவரங்களைப் பேசும் கட்டுரை நூல் என்று லௌகீக நிர்ப்பந்தங்களுக்காகப் புத்தக விவரத்தில் தரப்பட்டுள்ளது. ஆனால் இது உண்மையில் தாவரங்களை நிமித்தமாகக் கொண்டு, மனிதர்களின் மெய்யுரைத்த நூல். மண்தான் தாவரங்களையும் வளர்க்கிறது, மனிதர்களையும் புரக்கிறது. சில கூடுதல் அறிவுடன் மனிதன் இடம்பெயரும் தாவரம்; அவ்வளவுதான்.

ஆசிரியர் கந்தராஜா புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் உடல் புரந்தாலும் தமிழ் மண்ணை மறக்காதிருக்கிறார். 'மண் அளக்கும் சொல்' நூலின் ஒவ்வொரு சொல்லிலும் தொடரிலும் அவரது நினைவு மணக்கிறது.



## சலபதி 50: தொடரும் பயணம்

(பதிப்பு): பழ. அதியமான்

(தொகுப்பு): ப. சரவணன், கிருஷ்ண பிரபு

ரூ. 225

நவீன தமிழ்நாட்டின் சமகால முக்கியச் சமூகவியல் ஆய்வறிஞர் ஆ. இரா. வேங்கடாசலபதிக்கு (1967) 50 வயது நிறைவுற்றதையடுத்து, அவரது பங்களிப்புகள் குறித்து 2019இல் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் வாசிக்கப் பெற்ற 18 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். வ.உ.சி., புதுமைப்பித்தன், பாரதி, உ.வே.சா., பெரியார் போன்ற தமிழ்ப் பேராளுமைகள் பற்றிய ஆய்வுகள், பதிப்பு முயற்சிகள், இலக்கிய ஆக்கங்கள், நட்புப் பாராட்டல், ஆங்கிலப் படைப்புகள் எனப் பல்வேறு துறைகள் சார்ந்து 2018 வரையிலான சலபதியின் பணிகள் பற்றிய அறிமுகங்களும் மதிப்பீடுகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சிறிதும் மிகை தோன்றாப் பாராட்டுகளும், ஆழங்களில் புகுந்து புறப்பட்டு வந்த மதிப்பீடுகளும் கொண்ட, விமர்சகரைப் பற்றிய விமர்சன நூல் இது.



## சரஸ்வதி காலம்

வல்லிக்கண்ணன்

(ப-ர்): பழ. அதியமான்

ரூ. 225

“ஒரு தமிழ்ப் பத்திரிகை ஆசிரியராக இருந்த போதிலுங்கூட நண்பர் விஜயபாஸ்கரனால் என் கதைகள் என் விருப்பப்படி இருந்தால் போதும் என எவ்வாறு எண்ண முடிந்தது என்பதை நினைத்து இன்றுவரையிலும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிறேன். மகான்தான் அவர்.” சுந்தர ராமசாமி அந்த ‘மகான்’ வ.விஜயபாஸ்கரன் நடத்திய அந்தத் தமிழ்ப் பத்திரிகையின் வரலாறுதான் வல்லிக்கண்ணன் எழுதிய இந்த ‘சரஸ்வதி காலம்’. 1955இலிருந்து 1962வரை வெளிவந்த ‘சரஸ்வதி’ இதழின் வரலாற்றை, சாதனைகளை விரிவாக விளக்கும் நூல் இது. இலக்கியமாக மட்டுமல்லாது இதழியல் வரலாறாகவும் இந்நூல் விளங்குகிறது.



## நெடுவழி விளக்குகள்: தலித் ஆளுமைகளும் போராட்டங்களும்

ஸ்டாலின் ராஜாங்கம்

ரூ. 250

பொதுச் சமூகம் மறந்துவிட்ட அல்லது நினைவுகொள்ள மறுக்கிற தலித் ஆளுமைகளின் போராட்டங்கள், கல்விப் பணிகள், செயற்பாடுகளின் விரிவான மதிப்பீடுகளை இந்நூல் கொண்டிருக்கிறது. தலித் கல்வி வரலாறு தொடர்பில் காந்தியின் அரிசன சேவா சங்கம் மதுரைப் பகுதியில் மேற்கொண்ட பணிகளையும், தலித்துகளின் கல்வி வரலாற்றையும் குறித்த இரு கட்டுரைகள் புதிய செய்திகளை அறியத் தருகின்றன.

தமிழக தலித் அரசியல் கறுப்பின அரசியல் தளத்திலிருந்து பெற்றுக்கொண்ட போராட்ட வடிவத்தை முன்னெடுத்துச் செயல்பட்ட இயக்கம் பற்றிய சித்திரம், கோலார் தங்கவயலின் வைணவத் தொடர்பு, கல்விப் பணிகள், சித்தார்த்தா புத்தகச் சாலை, பதிப்பகப் பணிகள் எனக் காத்திரமான ஆதாரங்களுடன் இந்நூலின் பக்கங்கள் விரிகின்றன.




## சண்டைக்காரிகள்

[ஆண்களைப் புண்படுத்தும் பக்கங்கள்]

ஷாலின் மரிய லாரன்ஸ்

ரூ. 290

ஜாதி, மதம், வர்க்கம், குடும்பம், அரசாங்கம் எனும் ஆணாதிக்க நிறுவனங்களைப் பெண்கள் கேள்விக்குள்ளாக்கும்போது ஆண்கள் நடுங்கிப்போகிறார்கள். இந்தப் புத்தகம் அதையே செய்கிறது. இந்தப் புத்தகம் பேசும் பெண்ணியம் நீங்கள் இவ்வளவு காலமாகப் பழகிய பெண்ணியக் கோட்பாடுகளுக்கு மாறுபட்டது. இது ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்த உழைக்கும் வர்க்கப் பெண்ணின் குரல்.



## கறி விருந்தும் கவுளி வெற்றிலையும்

சாதியினாற் சுட்ட வடு


திருக்குமரன் கணேசன்

ரூ. 175

நவீன இந்திய இலக்கிய வரலாற்றில் தாக்கம் ஏற்படுத்திய வடிவமாகத் தலித் தன்வரலாற்று நூல்களைக் கூறலாம். விளிம்புநிலை வாழ்வு என்பதாக மட்டும் நின்றுவிடாமல் வரலாறு, புனைவு என்பவை குறித்த பார்வையையும் அவை விஸ்தரித்திருக்கின்றன. நீண்டகாலம் கழித்துத் தமிழ் தலித் தன்வரலாற்று வரிசையில் கச்சிதமான வருகையாக திருக்குமரனின் இந்நூல் அமைந்திருக்கிறது.

சாதியமைப்பில் பல்வேறு மாற்றங்கள் நடந்திருக்கும் சமகாலச் சூழலில் அதன் இருப்பு எத்தகைய வடிவங்களில் தங்கிக் கிடக்கிறது என்பதை 2000த்திற்குப் பிறகு வாழ நேர்ந்த தலித் இளைஞர் ஒருவரின் சுய அனுபவத்தின் வழியே நுட்பமாகக் காட்டுகிறது இந்நூல். தலித்துகள்மீது முன்புபோலச் சாதியை எளிதாகப் பிரயோகித்துவிட முடியாத அளவிற்கு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கும் நிலையில் சாதி எவ்வாறு வெவ்வேறு வடிவங்களில் இயங்கத் தொடங்கியிருக்கிறது என்பதையும் இந்நூல் விரித்திருக்கிறது.

**த | மி | ழ் | கி | ளா | சி | க் | க | வி | தை | க | ள்**



## ஆத்மாநாம் தேர்ந்தெடுத்த கவிதைகள்

(தொ-ர்): யுவன் சந்திரசேகர்

ரூ. 120

ஆத்மாநாம் தொடங்கின இடம் அகம் சார்ந்தது. ஆனால் அவரது பயணத்தின் போக்கில், புறம் சார்ந்தவராக வெளிப்படுகிறார். ஒருபோதும் தன் பயணத்துல அகம் சார்ந்ததையும் விடலை.

**சுகுமாரன்**

பொதுவாவே, ஆத்மாநாம் கவிதைகள் தர்க்கம், அதர்க்கம் அப்படிங்கற இரண்டு எல்லைகளுக்குள்ள போய்ப்போய் வந்துக்கிட்டே இருக்கு. ஆனா, தர்க்கத்தையும் அதர்க்கத்தையும் பிரிக்கிற கோடு அவ்வளவு துல்லியமானதாக இல்லை. அதனால்தான் வகைப்படுத்தறதும் சிரமம்.

**யுவன் சந்திரசேகர்**

## மொழிபெயர்ப்புக் கவிதைகள்




### சாய்மான வெளிச்சம்

**எமிலி டிக்கின்ஸன்**

தமிழில்: **ந. ஜயபாஸ்கரன்**

ரூ. 140

தனிமை சூழ்ந்த வாழ்க்கையாலும், தனித்தன்மை வாய்ந்த கவிதை மொழியாலும் அறியப்படுபவர் அமெரிக்கக் கவிஞர் எமிலி டிக்கின்ஸன். இயற்கை, காதல், காலம், மரணம், இறவாமை என்னும் புள்ளிகளில் இடையறாது சலிப்பவை அவரது கவிதைகள். அவர்மீது கொண்ட காதல் மட்டுமே தனது தகுதி என்று சொல்லும் ந. ஜயபாஸ்கரன், எளிமையாகத் தோற்றமளிக்கும் 71 கவிதைகளை மொழிபெயர்த்திருக்கிறார்.

## கவிதைகள்




### வத்சலா எங்கிருக்கிறாய்

**செந்தீ**

ரூ. 90

செந்தீ எழுதும் கவிதைகள் பாலியல் நினைவுகளின் நிஜமும் புனைவும் கூடியதாகும். தனிமை துறந்து கொண்டாட்ட மனம் கொண்டவை. நவீன வாழ்க்கையின் உள்முகமான காமத்தை பகடியாக்கி, வஞ்சித்துப் போற்றி எழுதப்பட்ட இக்கவிதைகள் நவீன கவிதையின் அடையாளமாக முயல்கின்றன.

இக்கவிதைகளில் மறைந்தும் தெளிந்தும் காணப்படும் காட்சிகளில் பொருள்படும் அன்றாடம் நிஜமானது. இருளும் பகலும் எங்ஙனம் காமத்தின் நூல்களால் இணைப்புற்றிருக்கின்றன எனச் சொல்ல முனைகிறார்.

கவனித்தும் தவறியும் கடக்கும் பாதையோரங்களில் செந்தீயின் வரிகளில் பொருட்படுத்தும் வகையில் கவிதையாகிறது.

**எஸ். செந்தில்குமார்**




### மத்தியான நதி

**செல்வசங்கரன்**

ரூ. 100

யதார்த்தத்திற்குள் இருக்கும் அயதார்த்தக் கூறுகளையும் சொல்லுக்குள் இருக்கும் முரணான பொருள்களையும் பற்றி செல்வசங்கரனின் கவிதைகள் பேசுகின்றன. உயிரற்ற பொருள்களைக் குறித்தும் அவை நுட்பமான குரலில் பேசுகின்றன. இதுவரை காணாத படிமங்கள், இதுவரை காட்சிப்படுத்தப்படாத நிலப்பரப்புகள், இதுவரை கேட்காத தொனிகள் ஆகியவற்றை இக்கவிதைகள் கொண்டுள்ளன. இது செல்வசங்கரனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு.




### மூன்று சப்பாத்துகளின் கதை

**நெகிழன்**

ரூ. 100

அன்றாட வாழ்வின் புழங்கும் பொருட்களில் உறைந்திருக்கும் அதி அற்புதம், மாயம் போன்ற தன்மைகளிலிருந்து தன்னைக் காட்சிப்படுத்திக்கொள்ள முனைகின்றன நெகிழனின் கவிதைகள். ஏரியைச் சுற்றி மரங்கள் நின்றிருக்கும் காட்சி,

நெகிழனின் கவித்துவத் தரிசனத்தால் மரங்கள் நீரின்மேல் தீராக்காதல் கொண்டவையாகவும், நீரின் அலைகளோ கரை தொட்டு மரம் காண முயல்வனவாகவும் உருமாறுகின்றன. அதே சமயம் வறண்ட ஏரியின் மேல் பறக்கும் கொக்கின் துளிக் கண்ணீரைப் பருக ஏரியின் தவளை நாக்கு காத்திருக்கிறது.

**எஸ். செந்தில்குமார்**




### துப்பாக்கிக்கு மூளை இல்லை

**எம்.ஏ. நுஃமான்**

ரூ. 90

'துப்பாக்கிக்கு மூளை இல்லை' என்னும் இத்தொகுப்பு இன வெறுப்புக்கும் வன்முறை அரசியலுக்கும் போருக்கும் எதிரான கவிதைகளைக் கொண்டிருக்கிறது. மதம், மொழி, இனம், தேசியம் என எந்தத் தரப்பையும் சாராத குரலை இந்தக் கவிதைகளில் கேட்கலாம். இக்கவிதைகள் துப்பாக்கிக்கு எதிரானவை. எல்லா விதமான அடக்குமுறைகளுக்கும் எதிரானவை. அமைதியையும் சமாதானத்தையும் சமத்துவத்தையும் வேண்டி நிற்பவை.

போரில் வெற்றிபெறுபவர் யாரும் இல்லை என்று சொல்லப்படுவதுண்டு. எல்லாப் போர்களுக்கும் எதிரான குரலைக் கொண்டிருக்கும் இந்தக் கவிதைகள் சமகால அரசியல் கவிதைகளில் தனித்த இடத்தைப் பெற்றுள்ளன.




### கருவளையும் கையும் கு.ப.ரா. கவிதைகள்

(ப-ர்): பெருமாள்முருகன்

ரூ. 130

1934இல் தொடங்கி 1944ஆம் ஆண்டு அவரது இறப்பு வரைக்கும் கு.ப.ரா. தொடர்ந்து கவிதைகள் எழுதினார். அவற்றைத் தொகுத்துக் 'கருவளையும் கையும்' என்னும் தலைப்பில் நூலாக்கம் செய்ய முயன்றார். அது வெளியாகியிருந்தால் தமிழ் நவீன கவிதையின் முதல் தொகுப்பாக விளங்கியிருக்கும். அவரது ஆசை ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நிறைவேறியுள்ளது. அவரது கவிதைகள் முழுமையாகத் தொகுக்கப்பட்டுக் கால வரிசைப்படி இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. நவீன கவிதை முன்னோடி ஒருவரின் கவிதைகள் எவ்வகையில் வெளியாக வேண்டுமோ அவ்வகையில் செம்பதிப்பாக இந்நூல் உருவாகியுள்ளது.

**வா | ழ் | க் | கை | வ | ர | லா | று**




## ஓர் அடிமைச் சிறுமியின் வாழ்க்கை நிகழ்வுகள்

ஹாரியட் ஜேகப்ஸ்

தமிழில்: கமலா கிருஷ்ணமூர்த்தி
அ.சங்கரசுப்பிரமணியன்
மு. சுதந்திர முத்து

ரூ. 395

150 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான இந்த நூல் உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கல்விக்கூடங்களில் கற்பிக்கப்படுகிறது. உலக அளவில் அதிகம் விற்பனையாகும் நூல்களின் பட்டியலில் இந்த நூலும் ஒன்று.

**நா | ட | க | ம்**

**இ | ந் | தி | ய | கி | ளா | சி | க் | வ | ரி | சை**




## நாக மண்டலம்


கிரிஷ் கார்னாட்

தமிழில்: பாவண்ணன்

ரூ. 160

ஒரு பெண், அவள் கணவன், ஒரு பாம்பு. இந்த மூன்று கதாபாத்திரங்களையும் சுற்றிப் பின்னப்பட்டுள்ள வசீகரமான புதிர்தான் கிரீஷ் கார்னாடின் நாக மண்டலம். பெண்ணின் கற்பு என்னும் கற்பிதத்தைக் கேள்விக்குள்ளாக்கும் இந்த நாடகப் பிரதி பெண்ணின் பாலுறவுத் தேர்வு குறித்த நுட்பமான அவதானிப்புகளை முன்வைக்கிறது.மரபுவழிப்பட்ட நம்பிக்கையின் துணை கொண்டு மரபார்ந்த சில நம்பிக்கைகளைக் கேள்விக்கு உட்படுத்துகிறார்.

**த | மி | ழ் | கி | ளா | சி | க் | வ | ரி | சை**





## ராமானுஜர்

இந்திரா பார்த்தசாரதி

ரூ. 190

தமிழின் முக்கியமான படைப்பாளிகளில் ஒருவரான இந்திரா பார்த்தசாரதி எழுதியிருக்கும் ‘ராமானுஜர்’ நாடகம் ராமானுஜரைப் பற்றிய தெளிவான சித்திரத்தை அற்புதமான நாடகீயத் தருணங்களின் மூலம் நம் கண் முன் நிறுத்துகிறது.

“ராமானுஜர் அற்புதமான சிந்தனையாளர் மட்டுமன்றி, மாபெரும் செயல்வீரர் என்பதே எனக்கு அவரைப் பற்றி நாடகம் எழுத வேண்டுமென்ற உந்துதல்” என்று கூறும் இ.பா., “இதைப் படிக்கிறவர்களும் மேடை ஏறும்போது பார்ப்பவர்களும் ராமானுஜரை நமக்குச் சம காலத்தவராக உணர வேண்டுமென்பதுதான் இந்நாடகத்தின் நோக்கம்” என்கிறார். அக்காலத்திய புரட்சியாளராக இருந்த ராமானுஜரை ஸ்தாபனச் சிறையினின்றும் மீட்டுப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் இ.பா. சொல்கிறார். வரலாற்று நாயகர்களில் ஒருவரான ராமானுஜரைப் புரிந்துகொள்ளத் துணைபுரிவதுடன், ராமானுஜரைப் பற்றி ஆழமாக அறிவதற்கான தூண்டுதலையும் இந்த நாடகம் ஏற்படுத்தும்.




## நாற்காலிக்காரர்

ந. முத்துசாமி

ரூ. 100

மக்கள் இரு குழுக்களாகப் பிரிந்து கோலிக்குண்டு விளையாடுகிறார்கள். சீட்டுக்கட்டு விளையாடுகிறார்கள். இவற்றைக்காட்டிலும் சுவாரஸ்யமான விளையாட்டு தேவைப்படுகிறது. அரசியல் விளையாட்டு விளையாடலாம் எனத் தீர்மானிக்கிறார்கள்! இந்த விளையாட்டின் விதிகள், போக்குகள், விளைவுகள் என்ன? இந்திய அரசியல் யதார்த்தத்தின் அபத்தம் நாடகக்காட்சிகளினூடே

தோற்றம் கொள்கிறது. ஆகிவந்த மதிப்பீடுகளையும் இயல்பாகிவிட்ட சமரசங்களையும் நோக்கிக்கேள்வி எழுப்பும் இந்த நாடகம் அரசியல் அபத்தத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. எழுதிப் பல பதிற்றாண்டுகள்

கடந்தாலும் இன்றளவும் பொருத்தப்பாடுடைய நாடகம் இது.

**அ | றி | வி | ய | ல்**




## ஜீன் மெஷின்

ரைபோசோம் ரகசியங்களும் கண்டுபிடிப்பில் போட்டிகளும்

வெங்கி ராமகிருஷ்ணன்


தமிழில்: த. சற்குணம் ஸ்டீவன்

ரூ. 395

ரைபோசோம் என்பது அனைத்து உயிரிகளிலுமிருக்கும் உயிர் சமிக்ஞையைப் பிரித்துப் பொருள்கொள்ளும் ஒரு மையச் செயல்பாட்டுச் சாதனம்; அதன் செயல்பாடு பற்றிய வரலாறு டிஎன்ஏயின் வரலாற்றைப் போன்றதே. ஏராளமான தகவல்களோடு, விரிவாகக் கவனத்துடன் எழுதப்பட்டுள்ளது வெங்கி ராமகிருஷ்ணனின் இந்த நூல்.

**ரிச்சர்ட் டாக்கின்ஸ்**

**நே | ர் | கா | ண | ல்**




பெஜவாடா வில்சன்:

## மாறாது என்று எதுவுமில்லை

பெருமாள்முருகன்

ரூ. 160

பெஜவாடா வில்சனிடம் கண்ட விரிவான நேர்காணல் நூல் இது. இதன் முதல் பகுதி காலச்சுவடு இதழில் (இதழ் எண் 216, டிசம்பர் 2017) வெளியாகி மிகுந்த கவனம் பெற்றது. கையால் மலம் அள்ளும் வேலையை ஒழிப்பதற்காகவும் துப்புரவுப் பணியாளர்களுக்காகவும் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டுவருபவர் வில்சன். கையால் மலம் அள்ளும் முறை ஒழிப்பு, துப்புரவுப் பணி ஆகியவை குறித்த பல்வேறு பார்வைகளையும் சட்டப் போராட்டங்களையும் அவர் பேசியுள்ளார். தனது அரசியல், சமூகப் பார்வைகளைப் பேசியுள்ளார். தன் தனிப்பட்ட வாழ்வு குறித்துப் பேசியிருக்கிறார்.

**பெருமாள்முருகன்**





## சுகுமாரன் நேர்காணல்கள்

**சுகுமாரன்**

ரூ. 290

கவிஞர் சுகுமாரன் அளித்த நேர்காணல்களின் தொகுப்பு இந்நூல். இலக்கியத்தை மையமாகக் கொண்டவை இதிலுள்ள உரையாடல்கள். எனினும் கவிதையும் கவிதை இயலுமே முதன்மையாக இடம்பெறுகின்றன.

**ஆ | ய் | வு**




## சாதி

**சுரிந்தர் எஸ். ஜோத்கா**

தமிழில்: **பக்தவத்சல பாரதி**


(விலையடக்கப் பதிப்பு)

ரூ. 95

இந்தியச் சாதி முறை தனித்துவமான ஒரு சமூக வடிவம். அதன் தோற்றம், நிலைபேறு, மாற்றம் ஆகியவை பற்றி அனைத்திந்தியத் தளத்தில் வைத்துப் பேசுகிறது இந்த நூல். நூலாசிரியர் சுரிந்தர் ஜோத்கா ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியர்.

சாதியின் புறநிலை இயங்கியல் காலகதியில் மாறிவந்தாலும், அதன் அடிநிலைக் கருத்தியல் தளம் அந்த அளவிற்கு மாறவில்லை. இதனைப் பண்டைக் காலம், காலனியக் காலம், பின்காலனியக் காலம் ஆகியவற்றினூடாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் நூலாசிரியர்.

சாதி பற்றிய செவ்வியல் நூல்களின் பார்வை, கீழைத்தேயவியல் பார்வை, கோட்பாட்டு விவாதங்கள், கல்விப் புலங்களின் அணுகுமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான பார்வையை முன்வைக்கிறார் சுரிந்தர் ஜோத்கா.




## யானைகளும் அரசர்களும்

**தாமஸ் ஆர். டிரவுட்மன்**

தமிழில்: **சு. தியடோர் பாஸ்கரன்**

ரூ. 290

இந்த நூலில் ஆசிரியரின் கவனம் போர் யானைகளைப் பற்றியது.

ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளாக யானைகள் ஆசியாவின் பல போர்க்களங்களில் இயங்கின. முற்றுகையிடுதலிலும் கோட்டைக் கொத்தளங்களைத் தாக்குவதிலும் யானைகள் முக்கியப் பங்காற்றின. அரசர்கள் யானையின் சிறப்பை உணர்ந்திருந்ததால் காடுகளைப் பாதுகாப்பதின் தேவையை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்கிறார் நூலாசிரியர். இந்தியாவிலிருந்து போர்யானை எவ்வாறு மேற்கு நாடுகளுக்கும், கிழக்கு நாடுகளுக்கும் பரவியது என்பதையும் டிரவுட்மன் விளக்குகின்றார்.

தொல்காப்பியப் பனுவலின் இந்நெடும்பயணத்தில் புராதன தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் அமைப்பை வரலாற்றினூடே உரைச் சித்திரமாகச் செல்வராசு தம் எளிய மொழிநடையில் தந்துள்ளார்.

**சு. இராசாராம்**




தமிழ்-சமஸ்கிருத

## நிகண்டு உறவு

**ச. பால்ராஜ்**

ரூ. 275

நிகண்டு என்றால் சொற்களின் தொகுதி, கூட்டம் என்று பொருள். வேதத்திலுள்ள பொருள் விளங்கா அரிதான சொற்களுக்குப் பொருள் விளக்கம் கூறவே சமஸ்கிருதத்தில் நிகண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழில் பொருள் விளங்காத சொற்களுக்கு மட்டும் பொருள் கூறிவந்த அம்மரபு பிற்காலத்தில் அனைத்துச் சொற்களுக்கும் பொருள் கூறும் தனி வகையாக வளர்ந்தது. இரு மொழிகளின் நிகண்டுகளையும் ஒப்பிடுகிறது இந்த நூல். தமிழ், சமஸ்கிருத மொழிகளின் தொன்மையான நிகண்டு வரலாற்றை அறியவும் அவற்றின் பொருட்புலத் தொடர்பை அறியவும் அவற்றின் வழி தற்கால அகராதியியலின் வளர்ச்சியைத் திட்டமிடவும் இந்த ஒப்பீடு பலனளிக்கும்.




## தொல்காப்பியம்: ஒரு பனுவலின் நெடும்பயணம்

**சிலம்பு நா. செல்வராசு**

ரூ. 195

தொல்காப்பிய இலக்கணக் கூறுகளுக்கான மரபுகளை வழங்கிய சமூகமும் அச்சமூகத்து நிகழ்வுகளும் தொல்காப்பியத்தின் கருத்தியலுக்கு அடிப்படையாகும். இந்தக் கருதலோடு காலவோட்டத்தில் தொல்காப்பியப் பனுவலில் ஏற்பட்ட அகநிலை, புறநிலை மாற்றங்களை ஆய்விற்கு உட்படுத்துகிறது இந்நூல். களவியல் என்னும் கருத்தியல் தமிழ்ச் சமூகத்தில் நிகழ்த்திய நெடும்பயணத்தையும் பாலைத்திணையின் பரிணாம வளர்ச்சியையும் இந்நூல் பதிவு செய்கிறது.




## ஆணவக் கொலைச் சாமிகளும் பெருமிதக் கொலை அம்மன்களும்

**ஆ. சிவசுப்பிரமணியன்**

ரூ. 110

ஆணவக் கொலைக்குப் பின்னால் பணம், அதிகாரம், சாதி என்பன மட்டுமின்றிக் குடும்பப் பெருமிதமும் கொலைகளுக்குத் தூண்டுதலாக அமைகிறது. இப்படிப்பட்ட இறப்புகளுக்குப் பின் தெய்வமாக்கப்பட்ட பதினான்கு பேரின் கதைகள்தான் இந்த நூல்; இதைப் புலனாய்வு அறிக்கை என்றும் கூறலாம். கதைகளை மட்டும் சொல்லாமல் அவற்றின் குற்றப் பின்னணி, தெய்வமாக்கப்பட்ட பின் உருவான வழிபாட்டு முறை என எல்லாவற்றையும் நூலாசிரியர் ஆழமாகப் பதிவுசெய்துள்ளார்.

**அ.கா. பெருமாள்**

பொ | ரு | ளி | ய | ல்




## பேரியல் பொருளாதாரம் ஓர் அறிமுகம்


**அலெக்ஸ் எம். தாமஸ்**

தமிழில்: **அஷ்வத்**

ரூ. 450

சாமானிய மக்களால் பெருமளவுக்குப் புரிந்துகொள்ள இயலாத பொருளாதாரப் போக்குகளே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. இப்போக்குகளின் திசையைப் புரிந்துகொள்வது வாழ்க்கை நிலையை கவனத்துடன் பரிசீலிக்கும் அனைவருக்கும் அவசியமானது. அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர், ஆய்வாளர்கள், பொருளாதார மாணவர்களுக்கு மட்டுமல்ல, குடிமக்களுக்கும் இது அவசியமாகும்.'

கி | ளா | சி | க் | வா | ழ் | க் | கை | வ | ர | லா | று




## மகாகவி பாரதியார்

**வ.ரா.**

(ப-ர்): பழ. அதியமான்

ரூ. 290

புதுச்சேரியில் அவரோடு உடனிருந்து பழகிய எழுத்தாளர் வ.ரா. எழுதிய இந்நூலைப் பாரதியின் முதல் வாழ்க்கை வரலாறு என்று சொல்லலாம். ரத்தமும் சதையுமான மனிதனாகப் பாரதியை வாசகர் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறார். நவீன உரைநடையின் முதல்வர் என்று புகழப்பட்ட வ.ரா. எளிய நடையில் உயிரோட்டமாக அமைந்துள்ள இந்த நூலை எந்த வயதினரும் வாசிக்கலாம். 70 ஆண்டுகளாகத் தொடர்ந்து அச்சில் இருக்கும் பாரதியைப் பற்றிய ஒரே நூல் என்ற பெருமைக்குரிய நூல் இது.

உ | ரை




## திருப்பாவை

**எளிய விளக்கம்**

**பி.ஏ. கிருஷ்ணன்**

ரூ. 160

பெரும்பாலான தமிழர்களின் வாழ்வில் மார்கழி மாதத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்திருப்பது ஆண்டாள் எழுதிய திருப்பாவை. பக்தியில் கரைந்து, கேட்பவரையும் கரையவைக்கும் இந்த முப்பது பாடல்களும் மனதைக் கொள்ளைகொள்ளும் கவித்துவமான ஆக்கங்கள். இந்தப் பாடல்களுக்கான எளிய உரையைச் சமகாலத் தமிழ் நடையில் வழங்கியிருக்கிறார் பி.ஏ. கிருஷ்ணன்.

கிருஷ்ணனின் பல்துறை சார்ந்த அறிவும் தகவல் செறிவும் உரையில் இயல்பாக வெளிப்படுகின்றன. கம்பன், அண்ணங்கராச்சாரியார், திருமூலர், பி.ஸ்ரீ., பாரதி, ஷேக்ஸ்பியர், ஷெல் சில்வர்ஸ்டைன் போன்றோரின் கருத்துகளும் வரிகளும் உரைக்குக் கூடுதல் வண்ணங்களைச் சேர்க்கின்றன.

திருப்பாவையின் ஒவ்வொரு பாசுரத்தையும் பற்றிய அருமையான தகவல்களும் ரசனையுடன் கூடிய விளக்கங்களும் இந்த உரையில் இருக்கின்றன. சொல்லுக்குச் சொல் உரை எழுதும் முறையினின்று வேறுபட்டு சுவாரஸ்யமான இலக்கிய வகுப்பில் அமர்ந்து பாடம் கேட்டதைப் போன்ற உணர்வைத் தரக்கூடிய உரை இது.

அ | னு | ப | வ | ப் | ப | தி | வு




## பனிவிழும் பனைவனம்

**செல்வம் அருளானந்தம்**

ரூ. 290

பலநூறு ஆண்டுகளாகத் தமிழர்கள் கேட்டும் பார்த்தும் வாசித்தும் கற்பனையில் சேர்த்துவைத்திருந்த போர்களுக்கும் அதன் வன்முறைகளுக்கும் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் நேரடிச் சாட்சியாக இருந்து அனுபவித்தவர்கள் ஈழத் தமிழர்கள். செல்வம் அருளானந்தத்தின் தனிக்குரலில் அவர்களின் ஒட்டுமொத்தத் துயரமும் வெளிப்படுகிறது. இலட்சியம், தியாகம், விடுதலை ஆகிய சொற்கள் இவரது மொழியில் புதிய அர்த்தங்களைப் பெறுகின்றன.




## மாமி சொன்ன கதைகள்

**சந்திரா இரவீந்திரன்**

ரூ. 150


எண்பதுகளிலிருந்து அறியப்பட்ட எழுத்தாளரான சந்திரா இரவீந்திரன் பல சிறந்த சிறுகதைகளைத் தந்தவர். அவரது மொழிநடை தனித்துவமானது. மனதின் உணர்வுகளை அப்படியே உருவி எடுத்துத் தன் மொழியில் படையலிடுபவர்.

இப்போது தன் மாமியின் அனுபவங்களை, அவருக்குள் இருந்த உணர்வுகளைச் சிறிதும் குறையாமல் இங்கே பதிவுசெய்திருக்கிறார்.

இந்நூல் நமக்குப் புதியதொரு களத்தை விரித்துக்காட்டுகிறது. மாமியின் உணர்வுகளை நம் மனதோடு பேசவைக்கிறது.

சந்திரா இரவீந்திரனின் படைப்பாற்றல் காரணமாக 'மாமி சொன்ன கதைகள்' அனுபவப் பகிர்வு என்பதையும் தாண்டிக் கலைத்துவம் மிக்க இலக்கியமாகியிருக்கிறது என்பதுதான் சிறப்பு!

**தாமரைச்செல்வி**




## குற்றமும் கருணையும்

இளம் ஐ.பி.எஸ். அதிகாரியின் தூத்துக்குடி அனுபவங்கள்

**வி. சுதர்ஷன்**

தமிழில்: **குமரேசன்**

ரூ. 275

உத்தரப் பிரதேசத்தில் பிறந்து தமிழகக் காவல் அதிகாரியாகப் பொறுப்பேற்ற அனூப் ஜெய்ஸ்வால் என்னும் அதிகாரியின் இள வயது அனுபவங்களைக் கதைபோலச் சொல்லும் நூல் இது. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்ட ஒரு அதிகாரி, சட்டம் அளித்துள்ள அதிகார வரம்பிற்குள் எவ்வளவு சாதனைகள் படைக்க முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் இந்தக் கதைகள்.

## இ | சை



### காலத்தை இசைத்த கலைஞன்:

இளையராஜா 80

**ஜி. குப்புசாமி**

ரூ. 90

இளையராஜாவிடமிருந்து பீறிடும் இசை வெள்ளம் விளக்க முடியாத ஒரு புதிர். இன்று தமிழகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரே மேதை அவர்தான்.

**சுந்தர ராமசாமி (ஆகஸ்ட் 2003, கல்கி நேர்காணல்)**

''அவரே கம்போஸ் செய்கிறார்; இசைக்கருவிகளை ஒருங்கமைக்கிறார்; ஆர்கெஸ்ட்ரேஷனைச் செய்கிறார்; நிகழ்ச்சியை நெறியாள்கை செய்கிறார். இதையெல்லாம் உதவியாளர்கள் இல்லாமலும் நிறுத்துக் கடிகாரம் இல்லாமலும் செய்கிறார். ஆச்சரியம்!''

**பண்டிட் ஹரி பிரசாத் சௌரஸ்யா**

இளையராஜா வெறும் சினிமா இசையமைப்பாளர் அல்ல; அவர் முழுமையான ஓர் இசைஞர்.

**அடூர் கோபாலகிருஷ்ணன்**



### எங்கேயும் எப்போதும்: எஸ்.பி.பி. நினைவலைகள்

(தொ-ர்): **அரவிந்தன்**

விலையடக்கப் பதிப்பு ரூ. 125

எல்லாப் பருவங்களுக்கும் எல்லாத் தருணங்களுக்கும் எல்லா உணர்வுகளுக்கும் எல்லா உறவு நிலைகளுக்கும் குரல் கொடுத்த கலைஞனைப் பற்றிய சொற்சித்திரங்கள்.

## தொ | கை | நூ | ல்



### காற்றின் நிழல்

**நஞ்சுண்டன்**

(தொ-ர்): **சிவபிரசாத்**

ரூ. 350

நவீன இலக்கிய உலகில் குன்றாத ஆர்வத்துடனும் குறையாத வேகத்துடனும் செயலாற்றிய இலக்கியத் தீவிரவாதிகளில் ஜி. நஞ்சுண்டனும் ஒருவர். அவரது அக்கறைகள் பரந்தவை. அதற்கேற்ப அவரது செயல்பாடுகளும் பன்முகம் கொண்டிருந்தவை. கவிஞர், சிறுகதையாளர், விமர்சகர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், செம்மையாக்குநர், ஒருங்கிணைப்பாளர் ஆகிய நிலைகளில் அவர் பங்களித்திருந்தார். அதன் மூலம் இளம் தலைமுறையினருக்கு ஆராதனைப் பாத்திரமாகவும் விளங்கினார்.

நஞ்சுண்டனின் நூல் வடிவம் பெறாத சிறுகதைகளும் தொகுக்கப்படாத கட்டுரைகளும் செம்மையாக்கக் கட்டுரைகளும் 'காற்றின் நிழல்' தொகுப்பில் இடம் பெறுகின்றன. எழுத்தில் வாழும் ஓர் இலக்கியவாதிக்கான அஞ்சலி இந்தத் தொகுப்பு.

## ஆ | வ | ண | த் | தொ | கு | ப் | பு



### வ.உ.சி.: வாராது வந்த மாமணி

தொகுப்பும் பதிப்பும்:

**ஆ.இரா. வேங்கடாசலபதி**

ரூ. 290

வ.உ.சி. பற்றி அவர் காலத்தில் வந்த பதிவுகளை ஆவணப்படுத்தி, அவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் வேண்டும் முயற்சியாக இந்த நூல் அமைகின்றது. வ.உ.சி.யின் புகழ் ஓங்கியிருந்த காலத்தில் வெளிவந்த அவருடைய வாழ்க்கை வரலாறுகளையும், அவர் மறைந்தபொழுது வெளியான இரங்கலுரைகளையும் பிற ஆவணங்களையும் கொண்டதாக இத்தொகுப்பு அமைகின்றது.

ஆ. இரா. வேங்கடாசலபதியின் நேர்த்தியான பதிப்பில், விரிவான முன்னுரையுடன் அமைந்துள்ள நூல் இது.

## சூ | ழ | லி | ய | ல்



### மரங்கள் பேசும் மௌன மொழி

**பீட்டர் வோல்லேபென்**

தமிழில்: **வெ. ஜீவானந்தம்**

ரூ. 225

மரங்களின் வாழ்வை அறிதல் என்பது ஒருவகையில் இயற்கையின் பேரதிசயத்தையும் அசாத்தியமான ஒழுங்கையும் அறிதல். மரங்களின் மொழியைப் புரிந்துகொண்டால் இயற்கையின் மொழியை, உயிரின் மொழியைப் புரிந்துகொள்ளலாம்.

முழுக்க முழுக்க மரங்களைப் பற்றியே பேசும் இந்த நூல் மரங்களைப் பற்றியது மட்டுமல்ல. மானுடம் தாண்டிய இவ்வுலகின் பெருவாழ்வைப் பற்றியது.

## மொ | ழி



### மொழிபெயர்ப்பியல்: பயணங்கள் பரிமாணங்கள்

**கே. தியாகராஜன்**

ரூ. 675

மொழிபெயர்ப்பு மரபுகள், மொழியியல் பார்வைகள், மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள், தேவைகள் எனப் பல்வேறு கூறுகளைக் கவனத்தில் கொண்டு மொழிபெயர்ப்பு என்னும் மிகச் சிக்கலான புதிரை விடுவிக்க முயல்கிறார் பேராசிரியர் கே. தியாகராஜன். பண்டைய இலக்கியங்களின் மொழியாக்கத்திலிருந்து இன்றுவரையிலுமான மொழியாக்கங்களின் முறைமைகளையும் சவால்களையும் பல்வேறு எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விவரிக்கிறார். மொழிபெயர்ப்பு தொடர்பாகத் தமிழில் விரிவாக எழுதப்பட்டுள்ள முதல் நூல் இது.